விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 22 ரவி ஆகிர் 9 இதழ் 353
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 4-2 87

யாழ்.பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு:

## சுமுகமுடிவுகாண்பதற்கு 'வித்தி' கொழும்பு விரைவு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு சம்பந்தமாகச் சுமுகமான முடிவு காண்பதற்கு, பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கே. கைலாசபதி, பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. சே. காசிநாதன் ஆகியோர் கொழும்பு சென்றுள்ளனர்.

வணிகத்துறை மாணவர்களின் பட்டம் தொடர்பாகப் பல்கலைக்கழக மானியக்குழு மேற்கொண்ட தீர்மானத்தைக் கண்டிக்கும் வகையிலேயே நேற்றுமுன்தினம் தொடக்கம் கலைப்பீட மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

ஆர்ப்பாட்டமில்லாத வகையில் கலைப்பீட மாணவர்கள் சகல விரிவுரைகளையும் பகிஷ்கரிப்பதென்றும், கொழும்பு சென்றுள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

★ காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலையில் மீண்டும்

# ஆயுதப்படையினர் தாக்குதல்!

# தொழிலாளர் பகிஷ்கரிப்பு!

(நமது மாவிட்டபுரம் நிருபர்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்குள் நேற்று நண்பகல் கடற்படையினர் நால்வர் சென்று, பொறியியலாளரையும் தொழிலாளரையும் தாக்கியதைத்தொடர்ந்து நண்பகல் முதல் சுமார் 1,200 தொழிலாளர்கள் வேலையைப்பகிஷ்கரித்து தொழிற்சாலை அலுவலக வாசலில் மறியல் செய்தனர்.

தங்களுக்குப் பாதுகாப்புக் கோரியும், ஆயுதப்படையினர் தொழிற்சாலை வளவிற்குள் பிரவேசிப்பதைத் தடைசெய்யக்கோரியும் இந்த மறியலை ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

### நேற்று நண்பகல்...

நேற்று நண்பகல் பதினொரு மணியளவில் தொழிற்சாலைத் துறைமுகத்தில் பணியாற்றியதாகக் கூறப்பட்ட கடற்படையினர் நால்வர் சீமெந்து தொழிற்சாலைக்குள் சென்று பொறியியலாளர் திரு. கணபதிப்பிள்ளையை பலமாகத்தாக்கியதாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது. இவர்களில் ஒருவர் யூனிபோம் அணிந்தும் மற்றும் மூவர் சிவில் உடையி

(8-ம் பக்கம் பார்க்க)

பிந்தியசெய்தி:

### பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் நேற்று நண்பகல் தொழிலாளர்களும் ஊழியர்களும் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு, நேற்றுமாலை கைவிடப்பட்டது.

ஆயுதப்படையினரின் தாக்குதல் குறித்து யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா பிரிகேடியர் ரணதுங்காவுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதைத் தொடர்ந்து, பிரிகேடியர் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பிரிகேடியர் ரணதுங்கா யாழ். அரச அதிபருக்கு உறுதியளித்ததைத் தொடர்ந்து அரச அதிபர், சிமெந்து தொழிற்சாலை தொழில் முகாமையாளர் திரு. எஸ். ஈ. பி. தனேந்திரனுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதப்படையினர் நுழைய அனுமதி இல்லை

பிரிகேடியர் உறுதி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலையில் நேற்று நண்பகல் நிகழ்ந்த அசம்பாவிதம் தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் .நேசையாவும் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கமும் பிரிகேடியர் ரணதுங்காவுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து ஆயுதப்படையினர் எவரும் சிமெந்து தொழிற்சாலை எல்லைக்குள் இனிமேல் முன்அனுமதியின்றி நுழைய மாட்டார்கள் என்று உறுதியளித்துள்ளார்.

மேலும் அசம்பாவிதங்கள் தலைதூக்காத வகையில் தொழிற்சாலையைச் சுற்றி இராணுவத்தினரும் பொலிஸாரும நேற்று கூட்டாக ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

★ யாழ்.மாவட்ட அபிவிருத்தி:

# "எம்மிடம்திட்டங்கள்உண்டு வெளிஉதவிதான் இல்லை"

கிம் கலந்துகொண்ட மாநாட்டில் 'நடா' கவலை

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்டத்தைச் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்குப் பல திட்டங்களை நாங்கள் தயாரித்திருந்தும், எந்தவித உதவியுமில்லாத காரணத்தால் எமது மாவட்டம் அபிவிருத்தி அடைய முடியாத நிலையிலிருக்கிறது''

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் பிரதிநிதி திரு. வை. வை. கிம் யாழ். நகரில் கலந்துகொண்ட மகாநாட்டில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

★ இலங்கை-இந்திய நட்புறவு

# அயல் நாடுகளின் நல்லுறவுக்கு உதாரணமாகத் திகழ்கிறது!

## பாரத ஜனாதிபதி ரெட்டி பெருமிதம்

''இந்து சமுத்திரத்தை அண்டியிருக்கும் நாடுகள் இச் சமுத்திரப் பிராந்தியத்தை அமைதி வலயமாக்குவதற்கு ஒன்றுசேர்ந்து உழைக்கவேண்டும்''

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி தமக்கும் பாரியாருக்கும் குழுவினருக்கும் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் ஜனாதிபதி மாளிகையில் அளிக்கப்பட்ட இரவு போசன விருந்து வைபவத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

ஜனாதிபதி திரு. ரெட்டி அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''நமது இரு நாடுகளும் பல்வேறு துறைகளில் முன்னேற்றமடைந்துள்ளன, இத்தகைய முன்னேற்றங்கள் மேலும் ஏற்படுவதற்கு அமைதியும், திடமும் மிக்க ஓர் சூழ்நிலை எமக்கு வேண்டியது மிக அவசியமாகும்.

''பத்து வருடங்களுக்கு முன்னரே இலங்கை, இந்து மகாசமுத்திர வலயத்தை சமாதானப் பிராந்தியமாக்குவதில் முக்கியபங்கு வகித்தது. இப்பிராந்தியத்தில் வாழும் எமக்கு தற்போது அதிகரித்துவரும் வல்லரசுகளின் பெருஞ்சக்தி அபிவிருத்தியிலும் அபாயம் நிறைந்திருப்பதைத்தெளிவாக விளக்குகின்றது.

''இலங்கைக்கும் — இந்தியாவுக்குமிடையே நிலவுகின்ற நட்புறவு அயல் நாடுகளின் நல்லுறவுக்கு உதாரணமாக விளங்குகின்றது பலதரப்பட்ட பிரச்னைகளுக்கும் நாம் தீர்வு காண்பதற்கு எடுத்த வழிவகைகள், எம்இருநாடுகளுக்குமிடையே நிலவுகின்ற ஒருமித்த நல்லுறவுக்குச் சான்று பகர்கின்றன.

### ஜனாதிபதி ஜே, ஆர். கருத்து

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தமது உரையில் மேன்மை தங்கிய இந்திய ஜனாதிபதியின் விஜயம் மிகப் பிரதானமான தொன்றாகும் என்றும் சிறப்பாகக்கூறின் இவ்விஜயம் எம்மிடையே நிலவுகின்ற சமகாலப் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதாகவும் அமைகின்றது என்றும் கூறினார்.

1977-ம் ஆண்டில் எமது அரசாங்கம் ஆரம்பித்த பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் தற்போது நல்ல முடிவைத்தருவனவாக விளங்குகின்றன. எமது நாட்டின் பொருளாதாரத்தை சுயமாகவே இயக்கும் விதத்தில் நாம் மிக நம்பிக்கையுடன் நாட்டை வழிநடத்திச் செல்கின்றோம் என்றும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார்.

''இலங்கையும் இந்தியாவும் தம்மிடையே நல்லுறவு நிலவவும் சர்வதேச ரீதியில் சமூகங்களுக்கிடையே நல்லுறவு நிலவவும் தொடர்ந்து உழைக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்றுதெரிவித்தார்.

### சாள்ஸ் 'மாஸ்டர்' காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ஜே. ஸி. சாள்ஸ் (சாள்ஸ் மாஸ்டர்) (84வயது) நேற்றுக்காலமானார்.

திரு. சாள்ஸ் யாழ். மத்திய கல்லூரி மாணவராகவிருந்து, பின்னர் ஆசிரியராகி கல்லூரியின் உபஅதிபராகப் பணியாற்றி இறுதியில் அதிபராகச் சேவையாற்றினார்.

யாழ். மத்திய கல்லூரி பழையமாணவர்களும் மற்றும் ஆசிரியர்கள், அதிபரும் இன்று இறுதி அஞ்சலி செலுத்துவார்கள். இறுதிச் சடங்குகள் நாளை பிற்பகல் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றன.

### மணிவாக்கு

பெரிய மனிதர்கள் அவதரித்த நாட்டில் பிறந்தவர்களே பாக்கியசாலிகள்.

— சுவாமி விவேகானந்தர்

## நமது நோக்கு

# இருநாடுகளும் ஒருநோக்கும்

இன்று இலங்கையின் 35வது சுதந்திரதினம்; சில தினங்களுக்கு முன் கொண்டாடப்பட்டது இந்தியாவின் 33வது குடியரசுத் தினம்; இவ்விரு வைபவங்களிலும் பங்குகொண்டவர் இந்திய ஜனாதிபதி திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள்.

இமயம் போன்ற இந்தியாவிலும் முத்துப் போன்ற சிறிய அழகிய இலங்கையிலும் சுதந்திரம் எங்கிருக்கிறது என்று கையை விரிக்கும் தீவிரவாதிகளும் உண்டு. தத்தம் நாடுகளின் குறைகளை ஆக்கபூர்வமானமுறையில் விமர்சிக்கும் அரசியல் எதிர்க்கட்சிகளும் உண்டு. தீர்க்கப்படாத தொல்லை தரும் பிரச்னைகளை மிகைப்படுத்திவசைபாடும்அரசியல் எதிரிகளும் உண்டு; எல்லாவற்றிற்கும் மேலாக, ஆளுங்கட்சியின் சாதனைகளை மிகைப்படுத்தியும், தோல்விகள் எல்லாம் கடந்த ஆட்சியின் குறைகள் என்று பிரசாரம் செய்துவரும் தலைவர்களும் இரு நாடுகளிலும் ஏராளமாக உண்டு.

இவ்வித மாறுபட்டகருத்துக்களும் கோஷங்களும் இவ்விரு நாடுகளிலும் ஜனநாயக ஆட்சிமுறை அமுலிலிருப்பதைக் காட்டுகின்றது. அது மட்டுமல்ல; அவ்வித ஆட்சி முறையில் உண்டான கட்சி ஆட்சியின் குறைபாடுகளைப் பறைசாற்றும் குரல்கள் பலத்திருப்பதையும் நாம் காண முடிகிறது.

நாம் இங்கு குறிப்பிட முயலும் கருத்து; எங்கள் மத்தியில் பிரசன்னமாகவிருக்கும் ஜனாதிபதி ரெட்டியின் ஆளுமைக்குத் தொடர்பானது.

ஒவ்வொரு நாட்டின் உள்வீட்டுச் சண்டைகள், வெளிநாட்டார் தாக்குதலைக்கண்டால் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்; அந்த அளவுக்கு, அடிமைத்தளையிலிருந்து பலம்இழந்த இவ்விரு நாடுகளும் தங்களை உயர்த்திக் கொள்வது அவசியம்.

இந்தியாவைப் பொறுத்தளவில், சுதந்திர இந்தியா கண்ட வெளிநாட்டுப்போர்கள் எல்லாவற்றிலும், இமயம் தொடக்கம் குமரி வரைக்கும் இந்திய மக்கள் ஒரு குடிமக்கள்போல்திரண்டனர்: அதேபோன்றுஇந்து சமுத்திரத்தில்கேந்திரஸ்தானம் வகிக்கும் இலங்கையும் ஒரே குரலில் வெளிநாட்டு எதிரியை விரட்டி அடிக்கும் வல்லமை பெற்றிருக்க வேண்டும்.

மாபெரும் இந்தியாவோ சின்னஞ் சிறிய இலங்கையோ இன்றைய அணு ஆயுதப் போட்டிப்போரில் தன்னைக் காப்பாற்றும்சக்தி இருப்பதாக எண்ணிவிட முடியாது. இருப்பினும், அணுஆயுதப்போருக்கு இடமளிக்காதவாறு பாதுகாத்துக் கொள்ளும் அரசியல் ஞானமும், அதற்கேற்ற நடவடிக்கைகளும் எடுக்கும் ஆற்றல் பெற்றருக்கவேண்டும்.

இந்த அடிப்படையில் எழுந்ததே இன்று எல்லா உலகும உரத்துப் பேசும் ''அணிசேராக்கொள்கை'' முன்னைநாள் இந்தியப் பிரதமர் நேரு இதற்கு வரைவிலக்கணம் வகித்தவர்களில் முதன்மை பெற்றவர்; இது ஒரு எதிர்மறைக் கருத்துடைய கொள்கை அல்ல; அடிமையில் அகப்பட்ட நாடுகள் சுதந்திரமடைந்த கட்டத்தில் தங்கள் நாடுகளைச்சீராகக்கட்டியெழுப்பும் பொறுப்பில் பூரணஅமைதி இன்றியமையாதது; வேற்று நாடுகளின் உதவியும் ஒத்தாசையும் இன்றியமையாதன; அது எந்த நாடானாலும் சரி; கம்மியூனிஸ்ற் ரஷ்யாவோ அல்லது முதலாளித்துவ அமெரிக்காவோ, எனவே பக்கம் சாயும் கொள்கை தேசிய அபிவிருத்திக்குத் தீங்காகும்.

இந்தக் கொள்கையை இறுகப் பிடிக்கும் இந்தியா, தனது ஜனாதிபதி மூலம் இலங்கைக்கு புகழ்மாலை சூட்டியிருக்கின்றது. தன் முகத்தைத்தான் காணமுடியாதவாறு எங்கள் பெருமையை நாம எப்போதும் சரியாகக் கணிப்பதில்லை. இந்து சமுத்திரம் அமைதிப் பிரதேசமாக வேண்டுமென்று முதன்முதல் பிரேரித்தது இலங்கை. இன்று அப்பிரச்னை முக்கியமான கட்டத்தை அடைந்திருப்பதால் கொழும்பில் இது பற்றி நடைபெறவேண்டிய மாநாடு அமெரிக்காவின் எதிர்ப்பால் நடைபெறுதிருக்கின்றது. இதன் அவசியத்தை இநதியப் பிரதமர் வலியுறுத்திவருகிருர். இலங்கை அதனை ஆமோதித்து வருகிறது.

அணிசேராக்கொள்கையைக் கேலி செய்யும் ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் அப்படி ஒரு கொள்கை இருக்க முடியாதெனவாதாடுகின்றனர்.

காரணம்; மூன்றும் உலக நாடுகள் ஏதோ ஒரு அணியில் சேரவேண்டியவர்களே! பொருளாதார உதவியை நாடி நிற்கும் இவ்வறிய நாடுகள தலை நிமிர்ந்து நின்று உதவி கேட்பதெப்படி? ஐரோப்பிய நாடுகளின திமிர் இது.

சர்வதேச நிதிப்பிரிவும் உலகவங்கியும் அமெரிக்காவின் 'கையாட்கள்' என்பதில் உண்மையுண்டு. இருப்பினும் தலைக்காணுது திருமதி இந்திராகாந்தி உதவி கோரிப பெற்றுமிருக்கிருர்.

இந்தியா ரஷ்யாவைச் சாருகின்றதென்று அமெரிக்காவின் அடிச்சுவடைப் பின்பற்றுகிற 'சிங்கப்பூர் அனடு கம்பனி' குற்றஞ்சாட்டுகிறதும் இலஙகை அமெரிக்காவுக்குச் சகாயமாகவிருக்கின்றதென்று 'கம்மியூனிஸ்' வாதுகள் கண்டனம தெரிவிப்பதும் இவ்விருநாடுகளின் வெளிநாட்டுக்கொள்கைக்கு மாசுபடுத்தும்; ஒருவருக்கு இடங்கொடுத்தால மறறவர் வந்திறங்குவரென்பது திண்ணம்.

எனவே தெரிந்தோ தெரியாமலோ உலக ஆதிக்கத்தை நாடும இருபெரும் வல்லரசுகளின் சல்லில் அகப்பட்டு அந்தரப்படாமல் இவ்விருநாடுகளும் —தாயும சேயும் ஒருவொருக்கொருவர் பாதுகாப்பாகவும ஆசிய நாடுகளின் வளர்ச்சிக்கு சாதகமாகவும், உலக அமைதிக்கு உறுதுணையாகவும், இருக்க வேண்டிய மகத்தான நோக்கை திரு .ரெட்டியின் விஜயம் பிரதிபலிக்கின்றது.

இதற்கேற்ற அரசியல் ஞானமும் ராஜதந்திரமும், இவ்விததொடர்புகளாலும், பரஸ்பர நம்பிக்கையாலும் ஒத்துழைப்பாலும் வளர்ச்சியடையுமென நம்பலாம்.

# சுத்தியின்றி இரத்தமின்றி பெற்ற சுதந்திரம்

இன்று கொண்டாடப்படும் சுதந்திரதினக் கொண்டாட்டம் முன்பு நடந்த விழாக்களிலும் பார்க்க பல நல்ல அம்சங்களைஉள்ளடக்கியதாக அமைகிறது. பிரித்தானிய ஆட்சியின்போது உருவாக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையாகிய பழைய பாராளுமன்றத்துக்குப் பிரியாவிடையும் இன்றைய அரசினுல் உருவாக்கப்பட்ட புதிய பாராளுமன்றத்தின் திறப்பு

## ஒரு கண்ணோட்டம்

விழாவும் இடம்பெறுவது இன்றைய சுதந்திர வருடத்தின் முக்கியத்துவத்தை பறைசாற்றுகிறது.

### ஆசியநாடுகளுக்கு விடுதலை

இச்சந்தர்ப்பத்தில் எமது நாட்டின் முதலாவது சுதந்திர தின நிகழ்ச்சிகளையும் நாட்டின் விடுதலைக்காக உழைத்த பெரியோர்களையும் போராட்ட வரலாற்றையும் இன்று நினைத்துப் பார்ப்பது பொருத்தமாக விருக்கும்.

எமது நாட்டின் விடுதலைக்கும் இந்தியாவின் விடுதலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டாவது உலகப்போர் மூண்டிருந்த நேரத்தில் இந்திய சுதந்திர போராட்டம் தீவிரமடைந்திருந்தது. யுத்தம் முடிவுக்கு வரும்நேரத்தில் இந்திய சுதந்திரப்போராட்டம் விரிவடைந்து நாட்டில் குழப்பங்களும் கிளர்ச்சியும் உயிர்ச்சேதமும் தீவிரமடைந்திருந்தது. இதற்க்கெல்லாம் அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் வின்சன் சர்ச்சில் அசைந்து கொடுக்கவில்லை ஆனல் உலகப்போர் ஒய்ந்த வேளையில் அங்கு நடந்த பொதுத் தேர்தலில் தொழிற் கட்சியின் தலைவர் அட்லி பிரபு பிரிட்டனின் பிரதமராக வெற்றியீட்டினார். இப்பெருமகனின் வெற்றிதான் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் விடுதலைக்கு அடிகோலியது எனலாம்.

நமது நாட்டின் விடுதலைப் போராட்டங்களுக்கும் இந்தியாவின் போராட்டங்களுக்குமிடையே வேறுபாடு இருந்தது. இந்தியப் போராட்டம் கிளர்ச்சிகளாகவும் உயிர்த்தியாகங்களாலும் நிர்ணயிக்கப்பட்டது. நமது நாட்டின் போராட்டமோ வெளில் கோரிக்கைகள் விடுப்பதும் தீர்மானங்கள் நிறைவேற்றி இங்கிலாந்துக்கு அனுப்பிவைப்பதும் போன்ற மிதவாதப் போராட்டமாகவே அமைந்தது.

### சுதந்திரத் தலைவர்கள்

தியாகங்கள் செய்யாமலும் இரத்தம் சிந்தாத ஒரு போராட்டத்திலீடுபட்டு நாட்டுக்கு விடுதலை தேடித்தந்த தலைவர்களில் முக்கியமானவர்களை

- ஏ ஸி. எம். பரீத் -

நினைவு கூர்வது நமது கடமை. திருவாளர்கள் டி. எஸ். சேனநாயகா, எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா. எப். ஆர். செனநாயக்கா, சேர். ஒலிவர் குணதிலக்கா, பாரன் ஜெயதிலக்கா, சேர் ஜோன் கொத்லாவலே, ஜே. ஆர் ஜெயவர்த்தனு ஆகியோரை சிங்கள இனத்தின் தலைவர்களாகக் கொள்ளலாம். சேர். பொன். ராமநாதன், சேர். பொன். அருணசலம், சபாநாயகர் துரைச்சாமி, சேர். ஏ, மகாதேவா, ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆகியோரைத் தமிழர்களின் தலைவர்களாகக் கொள்ளலாம். சேர். மாக்கான் மரைக்கார், டாக்டர் ரி. பி. ஜாயா, சேர். ராசிக்பரீத், டாக்டர் எம். சி. எம். கலீல், அறிஞர் சித்திக் லெப்பை ஆகியோரை முஸ்லிம்களின் தலைவர்களாகக் கொள்ளலாம். இவர்கள் அனைவரும் இந்நாட்டின் சுதந்திரதுக்கு உழைத முக்கியமானவர்கள்.

இந்தியா விடுதலையடைந்த காலகட்டத்தில்தான் இலங்கையின் சுதந்திரக் கோரிக்கைக்கு பிரிட்டன் சம்மதித்து நமது நாட்டுக்கு பூரண சுதந்திரத்துக்கு வழிகோலக்கூடியதான சரத்துக்களையும் சேர்த்து டொமினியன் அந்தஸ்து என்ற அளவில் நமது நாட்டுக்கு ஒரு சுதந்திர யாப்புத் தயாரிப்பதற்கு சோல்பரிப் பிரபு தலைமையில் ஒரு ஆணைக் குழுவை அனுப்பிவைக்கப் பிரிட்டன் சம்மதித்து. அக்காலத்தில்தான் இலங்கைத் தேசியக் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியாகவும், இலங்கைத் தமிழர் காங்கிரஸ் தமிழ்க் காங்கிரஸாகவும் உருமாற்றமடைந்தன. சோல்பரி

( 7ம் பக்கம் பார்க்க)

### கட்டாக்காலிகளால் விவசாயத்துக்கு ஆபத்து

அரசாங்கமும், விவசாயப் பகுதியினரும் விவசாய அபிவிருத்திபற்றி வானொலி மூலமும், சஞ்சிகைகள் மூலமும் விவசாய விரிவாக்க அதிகாரிகள் மூலமும் தகவல்களை வெளியிட்டு உதவிவருகின்றன.

திருநெல்வேலி பகுதியில் உள்ள பரவக்குளத்தில் நெல் செய்கை செய்யும் விவசாயிகட்கு கட்டாக்காலிகள் தொல்லையால் இந்த முயற்சியெல்லாம் பாழாகிவருகின்றது. பரவக்குளத்திற்கு அருகாமையில் உள்ளவர்கள் கால்நடைகளை அவிழ்த்துவிடுகின்றனர்.

அவைகளைப் பிடிக்கச் சென்ருல் அவை ஓடிவிடுகின்றன. விவசாயிகள் இக்கஷ்டகாலத்தில் பணத்தைச் செலவு செய்தும் நஷ்டமடைகின்றனர். இதையிட்டு விவசாயிகள் கால்நடைகளின் உரிமையாளரிடம் கதைக்கச் சென்ருல் வீண் மனஸ்தாபம் ஏற்படும். இதனல் அடுத்தபோகத்தில் இவ்வயல் நிலங்களில் விவசாயம் செய்ய முடியாமல்போய் விடும்; இப்பொழுதும் கட்டாக்காலிகள் தொல்லையால் சில் விவசாயிகள் விவசாயம் செய்யவில்லை. இதையிட்டு விவசாயப்பகுதியினர் உடன நடவடிக்கை எடுப்பது நல்லதாகும்.

கட்டாக்காலிகளைப் பிடிப்பதற்கு பிரதேச அபிவிருத்தி சபையின் உப அலுவலகங்கட்கு அதிகாரம் கொடுப்பது அவசியமாகும். சபைகளே அதற்குரிய ஆட்களை நியமிப்பதும் நல்லது; நல்லூர் பிரதேச அபிவிருத்திச்சபையினர் இவற்றைச் செய்யலாம்.

முன்னைய காலங்களில் கிராம சபைகள், பட்டினசபைகள் கட்டாக்காலிகளை பிடிக்க அதிகாரம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

எஸ். எஸ் ஆனந்தன்

திருநெல்வேலி கிழக்கு,
யாழ். நகர்.

## மக்கள் கருத்து

### தலைவர் விளக்கம்

அண்மையில் வெளியாகிய ''ஈழநாடு'' பத்திரிகையின் 7—ம் பக்கத்தில் தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்க நெறியாளர் குழுத் தேர்தலில் .02—02—82 தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான சுயேச்சைக்குழு வெற்றி பெற்றது என்று பிரசுரமாகியிருக்கின்றது. இத்தேர்தலில் அரசியல் கட்சிகள் சார்பில் போட்டி நடைபெறவில்லை

எஸ். கணேசன்
(தலைவர்)

தென்மராட்சி மேற்கு,
ப. நோ. கூ. ச.
நெறியாளர் குழு.

குருகவி மகாலிங்கசிவம் தினம்

## குருகவி என்ற ஒரு பெரும் கவிஞன்

உரையாசிரியர் உவப்புடன் பெற்ற
குருகவி என்ற ஒருபெருங் கவிஞன்
கற்பனை சேர்ந்த கவிமலர் கொண்டே
அற்புதம் மிகுந்த மாலைகள் தொடுத்தோன்
செந்தமிழ்ப் பேச்சைத் தேனென வழங்கிப்
பைந்தமிழ் மக்கள் பயனுறச் செய்தோன்
நகைச்சுவை தன்னைப் பாவினிற் பேச்சில்
நயம்பெற நல்கிய நலம்மிக உடையோன்
ஆசிரியத் தொழில் மேவிய பல்லோர்
கல்விச் செல்வம் எய்திடச் செய்தோன்
சிந்தனை மிக்கோன் கற்ருேர் தங்கள்
வந்தனைக் குரியோன் விவேகம் என்கின்ற
சொற்பொருள் தானே எனவாழந் திட்டோன்
நற்பெயர் அறிஞன் வாழிய புகழே!

'இளங்கோ'

### ★ பால் கமிஷன் சிபார்சின் பேரில்

# திருச்செந்தூர் தர்மகர்த்தா சபையை கலைக்க அரசுக்கு அதிகாரம் இல்லை

## கமிஷன் வரம்புமீறி சிபார்சு செய்துள்ளது என்றும் கூறுகிறது அரசு

சென்னை, ஜன. 3

திருச்செந்தூர் ஆலய தர்மகர்த்தா கொலை தொடர்பாக விசாரணை செய்த பால் கமிஷன் சிபார்சின் அடிப்படையில் திருச்செந்தூர் ஆலயதர்மகர்த்தா சபையைக் கலைக்கவோ சபை உறுப்பினர்களைத் தற்காலிகமாக நீக்கவோமுடியாது.

இதே வேளையில் திருச்செந்தூர் ஆலய தர்மகர்த்தாசபையைக் கலைக்குமாறு சிபார்சு செய்ய பால் கமிஷனுக்கு அதிகாரம் இல்லை.

பால் கமிஷன் தனது அதிகார வரம்பைமீறி இந்தஆலய தர்மகர்த்தா சபையைக்கலைக்குமாறு சிபார்சு செய்துள்ளது.

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

திருச்செந்தூர் ஆலய தர்மகர்த்தா சுப்பிரமணியம் கொலை தொடர்பாக விசாரணை செய்ய தமிழக அரசு நியமித்த பால் கமிஷனின் அறிக்கையை தி. மு. க. வினர் அரசின் அனுமதியின்றி வெளியிட்டதை அடுத்து பெரும் நெருக்கடி ஏற்பட்டது தெரிந்ததே.

இது இவ்வாறிருக்க, இம்மாதம் 10, 11ம் திகதிகளில் பால் கமிஷன் (மீதான விவாதம் தமிழக சட்டசபையில் இடம்பெறும் என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ)

## ஆளுநர் உரையை கண்டித்தனர்!

சென்னை, பெப். 3

தமிழக சட்ட மேலவை கூட்டுக் கூட்டத்தை கடந்த திங்கட்கிழமை பகிஷ்கரித்த தி. மு. க. சட்டசபை உறுப்பினர்கள் நேற்று சபைக்கு வந்து ஆளுநர் உரையைக்கண்டித்து உரையாற்றினர். (இ)

## பட்டாசு தொழிற்சாலை விபத்து: 6பேர் பலி!

சென்னை, பெப். 3

தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 6 பேர் பலியானார்கள் என அறிவிக்கப்பட்டது. (இ)

# “பெரும்பான்மை மக்களைப் பகைத்து ‘தமிழ்ஈழம்’ பெறமுடியாது”

(மாவிட்டபுரம்)

''தமிழ் ஈழம் பெறுவதற்கு அவசரப்பட்டு எந்தக்காரியத்திலும் இறங்குவது பத்திசாலித்தனமல்ல தலைவர்கள் மிகுந்த பொறுப்புடனும், நிதானத்துடனும் விடுதலை இயக்கத்தை நடத்திச்செல்கிறுர்கள். ஆகவே அவர்களுக்கு உறுதுணையாக அவர்கள் பின்னே நிற்பதே எமது கடமையாகும்''

இவ்வாறு ஊறணி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடந்த கூட்டமொன்றில் பேசிய கூட்டணி பிரமுகரும் சட்டத்தரணியுமான திரு. அ. குமரகுரு கூறினுர்.

வண. தேவராஜன் அடிகள் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது எமது இலட்சியப் தமிழ்ஈழமே என்பதில் எவ்வித மாற்றமும் இருக்கமுடியாது. அதற்கான பாதையில் தலைவர்கள்செயல்பட்டுவருகிறுர்கள். காலத்திற்குக்காலம் ஏற்படும் சூழ்நிலைகளை அனுசரித்து அதற்கேற்ப விடுதலை இயக்கத்தை நடத்தி வருகிறுர்கள். தீவிரம், போராட்டம் என்று கூறி மக்களை வீணைகப்பலி கொடுப்பதில் பிரயோசனமில்லை. எமது இலட்சியம் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் செயல்பட்டுவருகிருேம் இந்நிலையில் மக்கள் இயக்கத்தைப் பின்பற்றி நடப்பதே நல்லது.

''தமிழ்ஈழம்கிடைத்தாலும் நாம் அதனைப் பெற்றுக்கொண்டு எங்கே ஓடிப்போகமுடியாது. இந்த நாட்டிலே தான் வாழவேண்டும் ஆகவே பெரும்பான்மை மக்களுடன் பகைத்து தமிழ்ஈழம் பெறமுடியாது. அவர்களுடன் நட்புறவை வளர்த்துக்கொண்டே படிப்படியாக தமிழ்ஈழத்தை பெற முயற்சிக்கவேண்டும். தலைவர்கள் அதற்கான வழியில் செயல்பட்டு வருகிறுர்கள். அதனை நாம் பின்பற்றிச் செல்லவேண்டும்.

''ஹிட்லர், முசோலினி போன்று அவசரப்பட்டு மக்களைப் பலிகொடுக்கும் நிலைக்கு நாம் ஒருபோதும் ஆளாகக் கூடாது. சரியான சந்தர்ப்பம் வரும் வரை பொறுத்திருப்போம்''. (க)

## திருமலைக்கிளை பொதுக்கூட்டம்

(வவுனியா)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க திருகோணமலைக் கிளை பொதுக்கூட்டம் திரு. டி. எஸ் கே, வணசிங்கா தலைமையில் இம்மாதம் 7ம் திகதி திருகோணமலை இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

# குடிபெயரும் உழைப்பாளிகள்

## மேற்குலக உற்பத்தி இயந்திரத்தின் சக்கரமாக உள்ளனர்

பாரிஸ், ஜன. 3

''1970ம் ஆண்டுகளில் உலகின் வளர்ச்சிபெற்ற நாடுகளுக்கு உழைப்பாளிகள் குடிபெயர்ந்து செல்வது விசேஷ முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. 70க்களின் மத்தியில் இத்தொகை 1 கோடி 20 லட்சத்தை எட்டியிருந்தது. உலகின் பின்தங்கிய நாடுகளிலிருந்து வெளியேறிய உழைப்பாளிகள், தொழில்துறை வளர்ச்சிபெற்ற நாடுகளின் சமுக...பொருளாதாரக் கட்டமைப்பில் நேரடியாகவே செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தனர்,''

இவ்வாறு வளர்ச்சிகுறைந்த நாடுகளிலிருந்து வளர்ச்சிபெற்ற நாடுகளுக்குச் சென்று குடியேறிய உழைப்பாளிகள், நிபுணர்கள்பற்றி ஆராய்ந்து எழுதும் பொருளாதார நிபுணரான என். நிக்கலாய் எழுதியுள்ளார்.

மனித சக்தியை இறக்குமதி செய்யும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத்தில் வெளிநாட்டு உழைப்பாளிகள் கொண்டுள்ள முக்கியத்துவம் குறித்து பிரான்ஸின் வாசக சஞ்சிகையான 'எக்ஸ்பிரஸ்' எழுதுகையில். 'இவர்கள் ஈடுசெய்ய முடியாத, மிக மலிவான உழைப்பாளிகள், உற்பத்தி இயந்திரத்தின் பிரதான சக்கரம் இவர்கள். 1985—1990ம் ஆண்டுகளுக்கிடையில் ஐரோப்பாவின் முதல் தரமான வல்லரசாக பிரான்சை மாற்றும். சர்வதேச நிபுணர்களது எண்ணத்தை உள்ளூர் உழைப்பாளிகளினுல் செயல்படுத்த முடியாததனுல் வெளிநாட்டு உழைப்பாளிகள் முக்கியத்துவம் பெறுகிறுர்கள் பிரிட்டனே, மேற்கு ஜெர்மனியோ, சுவிட்சர்லாந்தோ எந்தவொரு நாடும் வெளிநாட்டு உழைப்பாளிகளின்றி சென்ற தஸாப்தங்களில் பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்க முடியாது'' என்று குறிப்பிட்டுள்ளதை இந்தப் பொருளாதார நிபுணர் ஆதாரமாகக் காட்டுகின்றுர்.

''அமெரிக்காவில் தேர்ச்சி பெருத மனித சக்தியில், மெக்ஸிக்கர்களும், போர்டோரிக்கர்களும் 70 லட்சம் முதல் 1 கோடிவரை உள்ளனர். பிரிட்டனில் 500.,000 பாகிஸ்தானியர்களும் இந்தியர்களும், பிரான்ஸில் 460,000 அல்ஜீரியர்கள் மொராக்கோ டூனிஷிய மக்களும் மேற்கு ஜெர்மனியில் 517,00 துருக்கியர்களும் உள்ளனர். வெளிநாட்டுத் தொழிலாளர்களால் இந்நாடுகள் பெறும் அனுகூலங்கள் ஏராளம். உள்ளூர் ஊழியர்களுக்கு வழங்க

(5ம் பக்கம் பார்க்க)

## பழையமாணவர் கூடினர்

(அரியாலை)

யாழ். பரி. யோவான் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தக்கூட்டம் உவில்லியம்ஸ் மண்டபத்தில் தலைவர் திரு. யே. ரி. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு, யே. ரி. செல்லையாவும், உபதலைவர்களாக சட்டத்தரணி எஸ். கனகரத்தினம் ஜே. பி. திரு. எஸ். எம். வி. திசைநாயகம், திரு, டபிள்யூ. ஏ. சொலமன், வைத்திய கலாநிதி பி. அருளானந்தம் ஆகியோரும் செயலாளராக திரு: எஸ். மகேந்திரனும், உபசெயலாளராக திரு. என். எஸ். தனபாலனும் பொருளாளராக திரு: எஸ். பஞ்சலிங்கமும், இருபது நிர்வாக சபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### “காங்கேசன்துறை சுற்றுடலில்

# சிமெந்துத்தூசியைதடுக்கும் யந்திரம்நாளைஇயக்கப்படும்

## கைத்தொழில் அமைச்சர் ஆரம்பிப்பார்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைச் சுற்றுடலைச் சேர்ந்த மக்களுக்கு பெரிதும் அசௌகரியம் இழைத்து வந்த சிமெந்துத்தூசியைவெளிவராது தடுப்பதற்கான இயந்திரசாதனம் நாளை வெள்ளிக்கிழமை கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில்மத்தியூவினுல் ஆரம்பித்து வைக்கப்படஉள்ளது.

காங்கேசன்துறை சிமெந்துக் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும்சிமெர்துத்தூசி இதுவரை காலமும் மக்களுக்கு பெரும் அசௌகரியத்தையும், சுகாதாரக் கேட்டையும், நஷ்டத்தையும் விளைவிக்க காரணமாக அமைந்திருந்தது.

இப்பகுதி வெற்றிலைப் பயிர்களில் இத்தூசி படிந்து வெற்றிலைக்கு ஓர்விறைப்புத்தன்மையைக் கொடுத்து அந்த வெற்றிலைக்கு கிராக்கியைக் குறைத்து விடுவதுடன் மற்றும் உப உணவுபயிர்களது உற்பத்திக்கும் இத்தூசி பெரும் இடைஞ்சலாக இருந்து வந்துள்ளது.

மக்களது சுகாதாரத்திற்கும் இத்தூசி பங்கம் ஏற்படுத்துவதனுல் இதனைக் கட்டுப்படுத்துமாறு காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி. திரு. இ. தெய்வேந்திரனும் பலமுறை சிமெந்துக்கூட்டுத் தாபனத்திடம் கோரியிருந்தார். இத்தூசியின் மூலம் ஏற்படும் அனர்தங்களை இப்பகுதியைச் சேர்ந்த பொது நல மன்றங்களும் அடிக்கடி சம்பந்தப்பட்டவர்களிடம் சுட்டிக்காட்டி வந்தன.

பாராளுமன்றத்திலும் கூட காங்கேசன்துறை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் இதனை பலமுறை எடுத்துக் கூறியிருந்தார்.

பல ஆண்டுகளாக விடுவிக்கப்பட்டுவந்த இக்கோரிக்கை நாளை நிறைவேறுகிறது நூசியை வெளியேருது கட்டுப்படுத்தும் சாதனம் சுமார் 3லட்சரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இச்சாதனம் மூலம் வெளியேறும் தூசியை குளிர்ச்சியடையச் செய்து பரவாமல் தடுக்க முடியுமெனவும் தெரிவிக்கப் படுகிறது.

நாளை இந்த இயந்திரசாதனத்தை கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில்மத்யூ இயக்கி ஆரம்பித்து வைப்பார்.

நாளை முழுவதும் சிமெந்துத் தொழிற்சாலையில் தங்கியிருக்கும் அமைச்சர் துறைமுக வேலைகளையும் பார்வையிடுவார். தொழிற்சாலை 3ம் கட்ட அபிவிருத்திப் பணிகள் பற்றியும் விரிவாக ஆராய்வார். அமைச்சருடன் சிமெந்துக் கூட்டுத்தாபன தலைவர் திரு. அசோகர் சோமரத்தினுவும் வருகை தருவார்.

சிமெந்து தொழிற்சாலை முகப்பில்இவர்களுக்கு அமோக வரவேற்பு அளிசகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### “இந்துசமய ஊழியர்களுக்கும்

# வெள்ளியன்று இருமணிநேர விடுமுறை வழங்கவும்”

## பாராளுமன்றத்தில் பண்டிதர் பிரேரணை

(யாழ்ப்பாணம்)

ஏனைய சமய அரசாங்க ஊழியர்களுக்கு 'வழிபாட்டுக்குரிய ஓய்வு கொடுக்கப்பட்டிருப்பது போல் இந்து சமய அரசாங்க ஊழியர்களுக்கும் அடுத்த மாதம் தொடக்கம் வெள்ளிக்கிழமைகளில் இரண்டு மணித்தியாலயங்கள் விடுமுறை கொடுக்கவேண்டுமென்ற தீர்மானமொன்றை ஊர்காவற்றுறைஎம். பி. திரு. பண்டிதர்பொ.கா.இரத்தினம் இம்மாதம் 12ம் திகதி பாராளுமன்றம் கூடும்போது, தனிநபர் பிரேரணையாக கொண்டுவருவதற்கு முன் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

உ—வெ

## "யாழ். ஒலிபரப்பு நிலையத்தை பிரதேசஒலிபரப்புநிலையமாக விரைவில்இயங்கசெய்யவும்"

### பண்டிதர் கா. பொ. இரத்தினம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணம் ஒலிபரப்பு நிலைய கட்டடவேலைகள்நிறுத்தப்பட்டுள்ளது என்றும் இந்நிலையத்தைமற்றும்பகுதிகளில் உள்ள பிரதேச ஒலிபரப்பு நிலையம் போல் நடத்தும் எண்ணம் அமைச்சுக்கு இப்போது இல்லைஎன்றும் கூறப்படுகிறது, யாழ்ப்பாணம் ஒலிபரப்பு நிலையத்தை எவ்விதவேறுபாடுமின்றி பிரதேச ஒலிபரப்பு நிலையமாக விரைவில் இயங்கச் செய்யவும்.''

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சபை உறுப்பினர் கலாநிதி க. ஞானலிங்கத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் கூறப்படுவதாவது:

''தமிழ்மக்களின் சார்பில் தகுதியும் திறமையும் வாய்ந்த உங்களை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச்சபை உறுப்பினராகதாம் நியமித்திருப்பதாக இராஜாங்கஅமைச்சர் கூறியுள்ளார். எனவே பின்வரும் விடயங்களைக் கவனித்து ஆவன செய்து அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச்சேவை சிங்களச் சேவை போல காலை 5.30 தொடக்கம் இரவு 11.45 வரை தொடர்ந்தும் நடைபெறுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தல்

முஸ்லிம் சேவை நடைபெறும் இரவு நேரத்தில் தமிழ் சேவையும் தனியாக நடைபெறச்செய்தல்

எனது தூண்டுதலால் யாழ்ப்பாணத்தில் கட்டத் தொடங்கிய ஒலிபரப்பு நிலையத்தை அனுராதபுர உறுகுணை ஒலிபரப்பு நிலையங்களைப் போன்று எதுவித வேறுபாடுமின்றி பிரதேச ஒலிபரப்பு நிலையமாக விரைவில் இயங்கச் செய்தல். (க)

## "கிறிஸ்தவ சபைகளிடையே ஒருமைப்பாடு அவசியம்"

(அரியாலை)

''கிறிஸ்தவ திருச்சபைகளிடையே ஒருமைப்பாடும் ஐக்கியமும் இன்று அவசியமாகும். கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொண்டாலும் எமது வணக்க முறைகளில் திருச்சபைகளுக்கிடையே பலவேறுபாடுகள் இருப்பது உண்மையாகும். இந்த வேறுபாடுகளிலும் ஒருமைப்பாடுஏற்படவேண்டும்''.

இவ்வாறு சுண்டிக்குளி புனிதர் யோவான் ஆலயத்தில் யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கருத்தரங்கில் இளவாலை பரிசுத்த ஹென்றியரசர் கல்லூரி உப அதிபர் வண. பிதா. ஐஸ்ரின் ஞானப்பிரகாசம் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவரும், தென்னிந்திய திருச்சபை யாழ். மறை மாவட்டப்பேராயருமான பேரருட்திரு; டி. ஜே. அம்பலவாணர் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் வண. பிதா. ஐஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தொடர்ந்து பேசுகையில் ''1910ம் ஆண்டு தொடக்கம் திருச்சபைகளிடையே ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்

[5ம் பக்கம் பார்க்க]

## யாழ். தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு 'எலக்ரோனிக்ஸ்' சேவை விரைவில் கிடைக்கும்

### கோப்பாய், மானிப்பாயும் இணைகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பண்ணையில் இவ்வருடம் புதிதாக இயங்கவிருக்கும் நவீன தொலைதொடர்பு சேவையான எலெக்ரோனிக் பரிவர்த்தனை நிலையம் மூலம் புதிதாக 'பலருக்கு தொலைபேசி வசதி கிடைக்கவிருக்கிறது.

இப்புதிய திட்டத்தின்கீழ் மானிப்பாய்,கோப்பாய் பகுதிகளும் சேர்க்கப்பட்டு இப்பகுதிகளிலிருந்து தொலைபேசி பெறுபவர்கள் யாழ்ப்பாண பாவனையாளர்களாக மாற்றப்படவிருக்கிறார்கள்.

புதிதாக தொலைபேசி தொடர்பு பெறவிரும்புபவர்கள் உடனடியாக 'பிரதேச தொடர்பு பொறியியலாளர், யாழ்ப்பாணம்' என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்படுள்ளனர்.

மானிப்பாய், கோப்பாய் பகுதியிலும் புதிதாக தொலைபேசி தொடர்பு பெறவிரும்புவோர் விண்ணப்பித்துப்பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி வசதி பெறுவதற்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள், மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லையென்றும்' இதுவரை தொலைபேசி வசதி பெற விண்ணப்பிக்காதவர்களே விண்ணப்பிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் தொலைபேசிக்கு விண்ணப்பித்து இதுவரை தொலைபேசி வசதிபெருதவர்களுக்கும் புதிதாக விண்ணப்பிப்பவர்களுக்கும் 82ம் ஆண்டு இறுதிக்குள் தொலைபேசி வசதி கிடைக்குமென்றும் தெர்விக்கப்படுகிறது.(க)

## "காந்தியின் பிரார்த்தனை ஆத்மசுத்தம் தரவல்லது"

(சாவகச்சேரி)

அண்ணல் மகாத்மாகாந்தியின் ''ரகுபதி ராகவ ராஜா ராம்'' என்ற அருட்சொல் பிரபந்த கூட்டுவழிபாட்டை போற்றிய காந்தியின் பிரார்த்தனையே ஆன்மசுத்தம் தரவல்லது. சமதர்மசித்தாந்தம், மார்க்ஸிய சித்தாந்தம் இந்து தர்மதார்மீகசித்தாந்தம்என்று பல சித்தாந்தங்களை எடுத்துக் காட்டியவர். அகிம்சாமூர்த்தியான அண்ணல் காந்தியே'' காந்திதினத்லுதிம் மீசாலை வடக்கு சைவவட்ட விழாவிலும் உரையாற்றிய பண்டிதர் கு. வி. மகாலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

சாவகச்சேரி திவ்வியஜீவன சங்கத்தலைவர் க. இராசரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் காந்தியின் சத்திய சோதனை போன்ற நூல்களை இக்கால இளைஞர்கள் படித்தால் பலன் பெறலாம். நாம்வாழ்வாங்கு வாழ அவரது போதனைகள் மிகவும் இன்றியமையாதனவாகும்.

தலைவர் தமது ஆரம்பவுரையில் நல்லதைச் சிந்தி, நல்லதைப் பேசு நல்லதைச் செய், நல்லதைக் கேள், இவை எல்லாம் காந்திஜீயின் போதனைகள் என்றுர். (வெ)

## யாழ். கல்வித் திணைக்கள கடன் வழங்குசபை, நியமன பத்திரம் நாளை தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள கடன் வழங்குசபையின் 21 பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்குரிய தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நாளைக்காலை கல்விப்பணிப்பாளர் திரு. க. சிவநாதன், நிருவாக உத்தியோகத்தர் திரு. கா. சந்திரராஜா ஆகியோர் முன்னிலையில் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கிறது.

21 அங்கத்தவர்களைக் கொண்ட இச்சபையில் கல்விச் சேவை, லிகிதர் சேவையும் அதனை சார்ந்ததும், சிற்றூழியர் தரம், நடுத்தர ஊழியர்கள் ஆகிய சேவைகளுக்கு தலா 'ஒரு ஆசனமும், ஆசிரிய சேவைக்கு 17 ஆசனங்களும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய சேவைக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கு ஒருவருக்கு 17 வாக்குகள் உண்டு. ஆனுல் ஒரு வேட்பாளர்களுக்கு ஒரு வாக்குகள் மேல் அளிக்கமுடியாது.

குறிப்பாக ஏனைய தரங்களை விட ஆசிரிய சேவைக்குரிய 17 ஆசனங்களையும் கைப்பற்ற ஆசிரியர்கள் மத்தியில் பலத்த போட்டி எற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. தமிழ் ஆசிரியர் சங்கம் தனது சார்பில் 17பேரை நிறுத்தியுள்ளது. ஏனைய தொழிற்சங்கங்களும், சுயேச்சைகளும் பங்குபற்றுகின்றன. (உ)

## "தம்பியார் குத்தப்பட்டதாக நள்ளிரவில் தகவல்வந்தது"

### கொலை வழக்கில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''நான் இறந்தவர் வீட்டுக்குச் சென்றபோது அவருடைய வீட்டுக்கும் பூதத்தம்பி என்பவரது வீட்டுக்குமிடையில் எனது தம்பியார் விழுந்துகிடந்தார்.

நீர்வேலி கந்தையா ராஜலிங்கம் கொலைவழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இறந்தவரின் சகோதரரும், கோண்டாவில் வ. பி. போ. வ. சபை பரிசோதகருமான கந்தையா சுந்தரலிங்கம் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

81 ஜுலை 14-ம் திகதி இரவு நீர்வேலியில் கந்தையா ராஜலிங்கம் என்பவரைக் கொலை செய்ததாகவும் அதே இடத்தைச்சேர்ந்த பூதத்தம்பி சிவக்கொழுந்து என்பவரின் வீட்டில் 3,450 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி மற்றும் ரொக்கமும் கொள்ளை அடித்ததாகவும் வை. மகாலிங்கம்' பெ. குருகுலசிங்கம் சி. மகாலிங்கம், இ. பாலசிங்கம், ச. ரவீந்திரன் ஆகியோர் மீது கோப்பாய் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டு இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

வழக்காளி தரப்பில் பொலிசாரின் உதவியுடன் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜராகியிருந்தார். 1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ராஜகாரியார் ஆஜராகியிருந்தார். மற்றைய எதிரிகளுக்கு சட்டத்தரணிகள் எவரும் ஆஜாராகவில்லை.

முதலாவது சாட்சியான கந்தையா சிவலிங்கம் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது.

''சம்பவதினம் எனது வீட்டில் நித்திரையாயிருந்தபோது இரவு 12 மணியளவில் சந்திரமோகன் என்பவர் வந்து, எனது தம்பியாரான ராசலிங்கம் கத்தியால் குத்தப்பட்டுள்ளதாகத் தகவல்தந்தார்.

நான் உடனே கார்பிடித்துக்கொண்டு அங்கு சென்றேன். அப்பொழுது தம்பியார் இறந்துவிட்டது தெரிந்தது.

நான் இறந்தவர் வீட்டுக்குச் சென்றபோது அவர், பூதத்தம்பி வீட்டுக்கும் அவரது வீட்டுக்குமிடையில் விழுந்துகிடந்தார்.

உடனடியாக அவரை காரில் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றேன். அவரின் உடலில் இரத்தக்காயங்கள் இருந்தன.

''ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியில் தம்பியார் இறந்துவிட்டதை அவதானித்தேன் இதனுல் வைத்தியசாலைக்குச் செல்லாமலே திரும்பி இறந்தவர் வீட்டுக்குச் சென்றும்.

சம்பவதினம் அதிகாலை 2.30 மணியளவில் நானும், கார்ச்சாரதியும் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வாக்குமூலம் அளித்தோம்.

(இவ்வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும்.) (மா)

## காங்கேசன்துறைக்கு 'திரிபோஷ' உப-உணவுத்திட்ட மீளாய்வுக்குழு விஜயம்

(மாவிட்டபுரம்)

'கெயர்' ஸ்தாபனத்தால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் இலவச 'திரிபோஷ' உப உணவுத்திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக அமெரிக்க வெளிநாட்டு உதவி நிறுவனம் இலங்கைக்கு ஒரு விசேட குழுவை அனுப்பி வைத்துள்ளது.

'கெயர்'ஸ்தாபன அத்தியட்சகர் திரு. ராய்லோர் தலைமையில் வந்துள்ள இந்த விசேட வைத்திய நிபுணர் குழு நேற்று முன்தினம் காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற் விஜயம் செய்தது.

இப்பிரிவில் இடம்பெறும் மகப்பேற்று சிகிச்சை நிலையங்கள், போஷாக்கு புனர்வாழ்வு நிலையங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்ட இந்தக் குழுவினர் தாய்மாருக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள், திரிபோஷ விநியோகிக்கும் முறைகள் பற்றியெல்லாம் விரிவாக ஆராய்ந்தனர்.

இலங்கை தாய்மார்களுக்கு 'திரிபோஷ' அவசியமா? இத் 'திரிபோஷ' இலங்கையில் ஒழுங்காக விநியோகிக்கப்படுகிறதா? என்பன போன்ற விபரங்களை அறியும் நோக்குடனேயே இவர்கள் ஆய்வு நடத்துவதாகதெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தாய்மார்களுக்கான சிகிச்சை, திரிபோஷ விநியோகம் என்பன திறம்பட நடந்து வருவதாகவும், சுகாதார தொண்டர்கள் சிறப்பாக சேவை புரிவதாகவும் மேற்படி குழுவினர் பாராட்டுத் தெரிவித்தனர்.

சுகாதாரப்பகுதி ஊழியர்களுடன் கலந்துரையாடல் ஒன்றிலும் பங்கு கொண்ட பின்னர் இக்குழுவினர் கொழும்பு திரும்பினர். (க)

"சுதந்திர தினத்தை

# தமிழ்த் தேசியஇனம் வழமைபோல் பூரணமாகப் பகிஷ்கரிக்க வேண்டும்"

## தமிழ் இளைஞர் பேரவை வேண்டுகோள்

(யாழ்ப்பாண)

அரசு கொண்டாடும் சுதந்திரதினத்தை வழமைபோல் தமிழ்த் தேசிய இனம் பூரணமாகப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று தமிழ் இளைஞர்பேரவை தலைமைக் கட்டுப்பாட்டு குழுவைச் சேர்ந்த திரு. மாவை சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவை சேனாதிராசாவிடுத்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''தமிழ் தேசிய இனத்தின் சுதந்திர அரசுகளாக விளங்கிய யாழ்ப்பாண, வன்னி அரசுகளை ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் படைகள் 16ம், 18ம் நூற்றாண்டுகளில் ஆக்கிரமித்தமுதல் தமிழினம் அடிமைப்பட்டுச் சீரழிந்து வருகிறது.

''1833 ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தமிழ்—சிங்கள அரசுகளை ஒன்றிணைத்ததிலிருந்தும் 1948ல் வெள்ளை ஏகாதிபத்தியம் தம் வாரிசுகளான சிங்களப் பேரின வாதிகளிடம் சுதந்திரம் எனும் பெயரில் ஆட்சியை மாற்றியதிலிருந்தும் தமிழ்த்தேசிய இனம் அழிவின் விளிம்புக்கே தள்ளப்பட்டுவிட்டது. அன்றுமுதல் பௌத்த சிங்கள ஆட்சிபீடங்களும் சிங்கள மக்களும் கொண்டாடிவரும் சுதந்திர தினத்தை எகிர்த்தும் 'பகிஷ்கரி'த்தும் வந்திருக்கிறது தமிழினம். கடந்த பத்தாண்டுகளில் பௌத்த சிங்களப் பேரின ஆட்சிபீடங்களும் அதன் ஆயுதப்படைகளும் தமிழீழ மண்ணில் ஆக்கிரமிப்பு ஆதிக்கத்தின் இலக்கான தமிழின அழிப்பு நடவடிக்கைகளைப் பல தடவைகள் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றன. அடிமைத்தளையை ஆயுதமுனையில் இறுக்கிவருகின்றன அரசு கொண்டாடும் சுதந்திரதினத்தைத் தமிழ்த் தேசியஇனம் பூரணமாகப் 'பகிஷ்கரிக்க' வேண்டும்.

---

தந்திக்கம்பி திருட்டு:

## நடவடிக்கை எடுக்க ஆயுதப்படையினர் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

தந்திக்கம்பிகள் திருடப்படுவது குறித்து பொலிசார் கடும் நடவடிக்கைகள் எடுக்கவிருக்கின்றனர்.

தங்கப்பவுண் விலைஏற்றத்தைத் தொடர்ந்து அடிக்கடி தந்திக்கம்பிகள் திருடப்படுவது வழக்கமாகிவிட்டது என்று கூறப்படுகிறது.

இதுசம்பந்தமாக ரோந்து சுற்றும் ஆயுதம்படையினர் சந்தேகத்துக்கிடமாக நடமாடுவோர்மீது நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு சுடலைக்குப் பக்கத்தில் அதிகளவு தந்திக்கம்பிகள் திருடப்பட்டுள்ளதாக, 'லைன்ஸ்மன்' சின்னத்தம்பி இராசரத்தினம் காங்கேசன்துறை பொலிஸ்நிலையத்தில் புகார் செய்துள்ளார். (மா)

---

## கூட்டணி செயற்குழு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு கூட்டம், வவனியா பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இம்மாதம் 13 ம் தேதி மாலை நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் அமைப்பாளர்கள், நியமனம்மூலம் கிளைகள் மீளமைப்பு, அரசியல் நிலைமைபற்றி ஆராயப்படவிருக்கிறது. (க

---

## பதவி உயர்வு

(வவுனியா)

இலங்கை குடுப்பத்திட்ட சங்க வட பிராந்திய முகாமையாளர் திரு. கலா. பரமேஸ்வரன் செயலாற்று முகாமையாளராக பதவிஉயர்வு பெற்று மார்ச் 1ம் திகதி சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பதவி ஏற்க விருக்கின்றார். (க)

---

கூட்டணி

## எம். பிக்கள் மா. ச. உறுப்பினர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களும், கூட்டணி மாவட்டசபை உறுப்பினர்களும் பல்வேறுவிடயங்கள் பற்றி சந்தித்து ஆராயவிருக்கிறார்கள்.

இச்சந்திப்பு வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இம் மாதம் 13ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது. (க)

---

## தோமஸ் சுவாமிகளுக்கு பொதுமக்கள் பிரார்த்தனை

(மாவிட்டபுரம்)

வசாவிளான் தோலகட்டி மவுனசபை ஸ்தாபகர் வண. தோமஸ் சுவாமிகளுடைய 18வதுமரண ஞாபகமாக மவுன சபை கோவிலில் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து அன்னாரின் கல்லறைக்கு ஊர்வலமாக சென்ற ஊர்மக்கள் கல்லறையை வணங்கி அவர் ஓர் புனிதர் ஆகவேண்டுமென பிரார்த்தனை செய்தனர். சுவாமி வண. பேர்னாட் இவ் வைபவத்தில் பங்கு கொண்டார்.

அன்னதானத்துடன் தொழிலாளர்களுக்கு பரிசில்களும் அன்னாரின் நினைவாக வழங்கப்பட்டன.

---

# இனரீதியானவன்செயல்சுயமாகஏற்படவில்லை அடக்குமுறைக்கு எதிராகவே போராட்டம்!"

### தேசிய இனப்பிரச்னை குறித்து கூட்டுப்பிரகடனம்

(கொழும்பு)

''இலங்கையில் கடந்த சில ஆண்டுகளாக இனரீதியான வன்செயல்கள் சுயமாக ஏற்படவில்லை. வடக்கில்தமிழ் போராளிகள் தவறான போராட்டமுறைகள் மூலம் சிங்களமக்களுக்கு எதிரானதொரு போராட்டத்தை நடத்தவில்லை. தம்மை அடக்கி ஒடுக்கும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தையே நடத்துகின்றனர். சிங்கள, தமிழ் பேதமின்றி அடக்குமுறையை அமுல்படுத்தும ஆயுதப் படையிருக்கெதிராகவே அவர்கள் போராடுகின்றனர்.''

இலங்கை ஆசிரியர் சங்கம், தொழிலாளர் ஐக்கியத்திற்கான குழு, ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், தமிழ் தொழிற்சங்க சம்மேளனம், அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம். ஸ்ரீலங்கா தேசியஆசிரியர் சங்கம், உள்ளுராட்சி லிகிதர் சேவைச்சங்கம், அரசாங்க ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்,தோட்ட சேவையாளர் சங்கம், ஐக்கிய லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன், அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம், ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு இயக்கம். விடுதலை தர்மிய ஒன்றியம், மலையக இளைஞர் பேரவை, இலங்கை மாணவர் சம்மேளனம், ஜனநாயக தேசிய முன்னணி, மக்கள் இயக்கம் ஆகிய தொழிற்சங்கங்களினால் வெளியிடப்பட்ட அறிக்கையில்மேற்கண்டவாறுகூறப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

''யாழ். நூல் நிலையத்திற்குத் தீ வைத்தல், கடந்த 4 அல்லது 5 ஆண்டுகளாக தோட்டப்பகுதிகளிலும் கொழும்பின் சுற்றுப்புறங்களிலும் வாழ்ந்த தமிழ் மக்கள் தொடர்ச்சியாக இம்சிக்கப்படல், போன்ற மிருகத்தனமான வன்செயல்களுக்குசாதாரண சிங்கள மக்கள் தலைமை தாங்கவில்லை. சில அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆயுதப்படைகளில் உள்ள சில இனவாதிகள் ஆகியோரின் அனுசரணையுடனே இனவாதிகளே இத்தகைய வன்செயல்களுக்குத் தலைமை தாங்கினர். கடந்த சிலஆண்டுகளாக தொழிலாள வர்க்கம் நடத்திய போராட்டங்களை முறியடிப்பதற்காகவும் இவ்வரச பயங்கரவாதமும் ஸ்தாபனப்படுத்தப்பட்ட குண்டர்களுமே பயன்படுத்தப்பட்டனர் என்பதை தொழிலாள வர்க்கம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

''தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஆயுதப்படைகளின் தலையீட்டை உடனடியாக நிறுத்தவேண்டும்.

''அடிக்கடி ஏற்படும் வன்செயல்கள் தொடர்பான பொலிஸ்—இராணுவ விசாரணைகளின்போது தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதிநிதிகள் பங்குபற்றக்கூடியவகையில் மாவட்டசபைகளின் கீழ் நிரந்தரப் பாதுகாப்பு வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட வேண்டும்.

''நியாயமற்ற முறையில் இராணுவ முகாம்களில்தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்வாலிபர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

''இதுவரை ஆட்சியிலிருந்த சகல அரசாங்கங்களும் பெரும்பாண்மை இனத்தின்'' பாதுகாப்பிற்காக என கூறிக்கொண்டு, பெரும் ஆரவாரத்துடன் பிரஜாவுரிமை—அரசகரும மொழிபற்றிய சட்டங்களையும், பிரமாணங்களையும் இலங்கையில் அமுல்படுத்தியுள்ளன. இவைமூலம் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. இனஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கப்பட்டது. அதே நேரத்தில் சிங்கள மக்களுக்கும் ஏதோ ஒன்றும் பெரிதாகச் சாதித்துவிடவும் இல்லை. நீண்டகாலமாக இலங்கையின் தீர்க்கப்படாத சிக்கலாக இருந்துவரும் தேசிய இனப்பிரச்னை இன்றைய அரசாங்கத்தின்கீழ் மிகமோசமான நிலைமையை அடைந்துள்ளது. கடந்த பல ஆண்டுகளாக வடமாகாணத்தில் குண்டர்களின் வகுப்புவாத ரீதியான தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. இதன் காரணமாக நாட்டைப் பிரிப்பதைத்தவிர வேறுவழியில்லை என்ற நிலைக்கு வடமாகாணத் தமிழ்மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். தமது உயிர்பாதுகாப்புப்பற்றி நம்பிக்கை இழந்த நிலையில் வாழும் தோட்டத்தொழிலாளர்களில் பெரும்பாண்மையினர் இலங்கையைவிட்டு வெளியேறுவதற்கு தமக்கு அவகாசம் அளிக்குமாறு கோருமளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது. என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வெ)

---

## நூலக வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினர் இம்மாதம் 22ந் திகதி தொடக்கம் 27-ந் திகதி வரை நூலக வாரம் கொண்டாடவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களின்போது யாழ். பொதுசன நூல் நிலையமும் எரிக்கப்பட்டது தெரிந்ததே.

பொதுசன நூல்நிலையத்தை மீண்டும் புனரமைப்பதற்காக யாழ். மாநகரசபை இந்நூலக வாரத்தைக் கொண்டாடுகிறது. (மா—வெ)

---

கிறிஸ்தவ

(4 ம் பக்கத்தொடர்ச்சி)

டையும் ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஒருமைப்பாடு இன்று மிக அவசியமாகிறது, இந்த ஒருமைப்பாட்டைக்குருமார்கள் மட்டுமல்ல. திருச்சபையின்ஒவ்வொருஅங்கத்தவரும் மேற்கொள்ளவேண்டும். இதன் மூலமே ஒருமையும் ஐக்கியமும் ஏற்படும்'' என்றார். [அ)

---

குடிபெயரும்...

3ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய சம்பளத்திலும் குறைவாக இவர்களுக்கு வழங்கலாம். தொழில்நிலைமைகள் பற்றிக்கவலைகொள்ளத்தேவையில்லை'' என்றும் திரு. எஸ். நிக்கொலாய் எழுதியுள்ளார்.

---

"இலவசப் புத்தகவிநியோகம்:

## ஏழை மாணவர்களுக்கு வசதியளிக்கிறது"

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கு வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இலவச பாடப் புத்தகங்கள் விநியோக வைபவம் அதிபர் திருமதி பி. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அதிபர் தமது தலைமையுரையில் கூறியதாவது; புத்தகங்கள் வாங்கித் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப வசதியின்றி எத்தனையோ ஏழைகள் கஷ்டப்படக் கூடாதென்பதற்காகச் அரசாங்கம் செலவுசெய்கிறது.

பெற்றோர்கள், ஆசிரியர்கள் அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், மாணவர்கள் உட்பட பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு அதிபர் திருமதி கணேசலிங்கத்தினால் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இந்த வைபவத்தில் கனிஷ்ட அதிபர் திரு. வே. பொன்னையா திருமதி பூ. நடேசன், திரு. நீ. அரசரத்தினம், மாணவி செல்வி குமுதரோஜினி, செல்வி செ. சுகந்தி ஆகியோரும் உரையாற்றினர். (வெ)

---

கிரிக்கட்

## பல்கலைக்கழகம் வெற்றி

(அரியாலை)

யாழ். பல்கலைக்கழக கிரிக்கட் கோஷ்டிக்கும், யாழ், இந்துக்கல்லூரி கிரிக்கட் கோஷ்டிச்குமிடையே இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 40 ஓவர் கிரிக்கட் போட்டியில் யாழ், பல்கலைக்கழகக் கிரிக்கட் கோஷ்டி 3விக்கற் 4 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

யாழ். இந்துக் கல்லூரிக் கோஷ்டி துடுப்பெடுத்தாடிய பொழுது 39·2 ஓவர்களில் எல்லாவிக்கட்டுகளையும்இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியில் விளையாடிய செல்வன்கள் எம். விஷயலக்ஸ்மன், எஸ். ரூபநந்தசிவம், என்.சரவணபவன், ஆகியோர் முறையே 58, 28, 26 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய யாழ். பல்கலைக்கழகக் கோஷ்டியைச் சேர்ந்த செல்வன் ரவிராஜ் 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளையும், செல்வன் சுதர்சன் 36 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் செல்வன் கிரிதரகுகன் 33 ஓட்டங்களைக்கொடுத்து 2 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

யாழ். பல்கலைக்கழகக் கோஷ்டி துடுப்பெடுத்தாடிய பொழுது 31 ஓவர்களில் 7 விக்கட்டுகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்று தனது ஆட்டத்தை முடித்துக் கொண்டது இக் கோஷ்டியில் விளையாடிய செல்வன் ரவிராஜ் 63 ஓட்டங்களையும், செல்வன் சுதர்சன் 20 ஓட்டங்களையும், செல்வன் சூரியகுமார் வெளியேறாமலே 44 ஓட்டங்களையும் பெற்றனர் இவர்களை எதிர்த்துப்பந்து வீசிய செல்வன் கே. மகேந் 46 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், செல்வன் எம். சிவராமன் 39 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கட்டுகளையும், செல்வன் எஸ். மங்களேஸ்வரன் 26 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கட்டையும் பெற்றனர்.

கடைசி வாரம்
8 வது-மாபெரும் வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

வெலிங்டன் மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.30
பட்டாக்கத்தி பைரவன்

Regal Cinema (Jaffna) Tele. 360.
தினசரி 10—30, 2—15, 4—30, 7—00, 9—30
OPeration Day Break
12 - 2 - 82 முதல்
தனிமரம்

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
இந்தியாவில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்னும் 3 தினங்கள் மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்


வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சுதாகர், ராதிகா நடித்த
அன்னப்பறவை

ஸ்ரீதர் யாழ். நகர்
தினசரி: 10:30, 2:30, 6:00, 9:30
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதிய பிரதி)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
139 வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி குரு
அநேகரின் வேண்டுதலுக்காக சில தினங்கள் மட்டும்!

Rajah JAFFNA
LOVE BUG'S RETURNS
Daily 10—30, 2—00, 4—30, 7—30, 9—30
WALT DISNEY Presents
HERBIE GOES TO MONTECARLO
(Color by Technic
For School Children Contact Management

WINDSOR (JAFFNA) Daily 5 Shows
Grand Gala Release
'Airport '80 – The Concorde'
Starring: Alain Delon. George Kennedy Susan Blakely
இரு மடங்கு ஒலி வேகத்தில் செல்லும் 'கொங்கோட்' விமானம் பாரிஸ் நகரத்திற்குத் தனது கன்னிப் பயணத்தைத் தொடங்குகின்றது. அதிவிசேஷ பயிற்சி, அனுபவம், ஆற்றல் மிக்க விமானிகள் அதைச் செலுத்துகின்றார்கள். திடீர்த் தாக்குதலினால் பிரயாணிகளின் உயிர்கள் ஊசலாடுகின்றன. விமானிகள் எப்படி இதைச் சமாளிக்கின்றார்கள் என்பதை வெண்திரையில் காண்க.



காரைநகர் சிவாச்சிமத்தில் திருமதி தங்கம்மா நடராஜா தலைமையில் நடைபெற்ற பிரார்த்தனை வைபவத்தில் கலந்து கொண்ட பிள்ளைகளைப் படத்தில் காண்க. இப்பிரார்த்தனை பிரதி வெள்ளி, ஞாயிறு தினங்களில் தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

வில்பத்து தேசிய பூங்கா:

## வேட்டையாடச் சென்றோர்மீது துப்பாக்கிப் பிரயோகம் ஒருவர் பலி!

(அநுராதபுரம்)

வில்பத்து தேசிய வனவிலங்குப்பூங்கா பாதுகாவலருக்கும், சட்டவிரோதமாக அங்கு வேட்டையாடச் சென்றோருக்குமிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் வேட்டைக்குச் சென்றவர்களில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதுடன் ஏனையவர்கள் அங்கிருந்து தப்பியோடிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமைபோல வனக்காவல் நடவடிக்கையில் மேற்படி காவலர்— இவர்களில் ஒருவர் ஆயுதம் தரித்துக்கொண்டு கடமை புரிந்துகொண்டிருந்த வேளை, ஆறு வேட்டைக்காரர் துப்பாக்கி, வேட்டைக்கத்திகள் சகிதம் அவ்விடத்திற்கு வந்ததாகவும், அங்கே காவலர்கள் நிற்பதைக் கண்டதும் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், இதனைத் தொடர்ந்து ஆயுதம் தரித்துநின்ற காவலாளி தற்காப்புக் கருதி அவர்கள் மீது சுட்டபொழுதே ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஏனையோர் அவ்விடத்தினின்றும் ஓடிவிட்டதாக விசாரணைகளின்போது தெரியவந்தது.

ஐந்து வனக்காவலாளிகளும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(கி)

## நகுலேஸ்வரர் ஆலய கைலாசவாகனம்

(பண்டத்தரிப்பு)

கீரிமலை அருள் மிகு ஸ்ரீ நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு 40 ஆயிரம் ரூபா செலவில் புதிய கைலாச வாகனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ள இக் கைலாச வாகனத்தின் வெள்ளோட்ட வைபவம் இம் மாதம் 19ம் திகதி நடைபெறவுள்ளது.

பாடப்புத்தகங்கள்

## விநியோகம்

(மட்டுவில்)

இந்த ஆண்டு இலவச பாடப் புத்தக விநியோகத்திற்காக, சாவகச்சேரிக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கான நாற்பதினாயிரம் தமிழ் மொழிப் பாடப்புத்தகங்கள், இரண்டு இராணுவ லொறிகள் மூலம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலுள்ள வட்டாரக் கல்வி அதிகாரியின் அலுவலகத்திறகு வந்து சேர்ந்தன. சாவகச்சேரி வட்டராக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராஜா இப் பாடப்புத்தகங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் வைக்கப்பட்டிருக்கும் இந்த இலவசப் பாடப்புத்தகங்களை பெப்ரவரி முதல் திகதி முதல் சாவகச்சேரி கல்வி வட்டாரத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் விநியோகிப்பதற்கான ஒழுங்குகளைப் பாடசாலையின் அதிபர்கள் மூலம் வட்டாரக் கல்வி அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

## இன்றைய பலன்

தை மாதம் 22 ம் திகதி
வியாழக்கிழமை
(4—2—82)

மேடம்: பாதையில் பழுதுண்டு, பகைவர் காத்திருப்பர், செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும், சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம், உணவு விஷயத்தில் கவனம்வேண்டும்.

இடபம்: அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும், புதிய கோணத்தில் இருந்து தாக்குதல் உருவாகும், உம்மிடம் உதவி பெற்றவர்களே இன்று கையை விரிப்பார்கள், விழிப்புடன் இருக்கவும்.

மிதுனம்: இனிய வார்த்தைகளின்மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள், பொருள் வரவுக்கும் இடமுண்டு, சுற்றுடலில் மதிப்பு உயரும், பெரியவர்களே உங்கள் ஆலோசனையைக் கேட்க முன்வருவார்கள், இறை அருளும் உண்டு.

கடகம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும், எதிலும் துக்க மனப்பான்மை உருவாகும், சிநேகிதர் வழியால் கவலைகள் தோன்றக் கூடும், விவசாயிகளாயின் ஏமாற்றத்துக்கு இடமுண்டு, மனத்திடம்வேண்டும்.

சிங்கம்: பொறியியலாளர்களுக்கு இன்று பொன்னான தினம், பூமி விவசாரத்தில் நல்ல முடிவு தென்படும், செலவுக்கு வேண்டிய பணம் கிடைக்கும், சிலர் வாழ்க்கையில் வாகன சுகத்துக்கும் இடமுண்டு.

கன்னி: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும், இனசனம் கூடுவர், புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

துலாம்: எதிர்பாராதவிதத்தில் பொருள் விரயமாகும், வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றிமறையும், சிந்தையில் குழப்பநிலை ஏற்படும், வீட்டிலும் சிறிது பூசலுக்கு இடமுண்டு, தெய்வ நம்பிக்கை நன்று.

விருச்சிகம்: பிரிந்தவர் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், குடும்பப் பிரச்னையில் சுமுகமான நிலை தென்படும், சுற்றுடலில் வேண்டியதை சாதிக்கக் கூடிய செல்வாக்குப் பெருகும், இன்று பொன்றாள்.

தனு: எதிர்பாராத முனையில் இருந்து ஆபத்து உருவாகும், உள் வீட்டிலேயே சிறிய பூசல்கள் தோன்றக்கூடும், இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும், தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

மகரம்: எண்ணிய கருமத்தில் இன்று வெற்றியுண்டு, புண்ணிய வழிகளில் பொருட் செலவும் ஏற்படும், கண்ணியமான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடப்படலாம், வரவேற்கத்தக்கதினம்.

கும்பம்: பயன் தரும் பயணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம், பழைய நினைவுகள் தலைதூக்கும், வார்த்தையில் வசீகரமும், வாழ்க்கையில் சுவையான நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

மீனம்: புதுமையான சம்பவங்கள் நடைபெறும், சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு, விருந்தினர் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## நெல்வயல்களில் உப உணவு

(சாவகச்சேரி)

பொருளாதார நெருக்கடியுள்ள இந்தக் காலக்கட்டத்திலே மக்கள் நெற் செய்கையில் மாத்திரம் தங்கியிருக்கக் கூடாது. உபஉணவுப்பொருட்களான பயறு, உழுந்து, சணல் கச்சான், கௌபீ, எள்ளு, சோயா அவரை போன்றவற்றை உண்டாக்க வேண்டும்.

மறவன்புலோ சகலகலா வித்தியாலயத்தில் நடந்த விவசாய அபிவிருத்திக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் கே. துரைராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(க)

# வரி விளம்பரம்

## சேவை

யேகோவாவின் சாட்சிகளின் வட்டார மாநாடு மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலையில் பெப்ரவரி மாதம் 6—ம், 7—ம் திகதிகளில் நடைபெறும். மாநாட்டின் கூட்ட நேரங்கள் 6—2—82 சனிக்கிழமை காலை 9—30இலிருந்து மாலை 4—30 மணி வரை. 7—2—82 ஞாயிற்றுக்கிழமை காலை 9—20இலிருந்து மாலை 5—45 மணி வரை. எல்லோரையும் அன்புடன் அழைக்கிறோம். (2177)

## தேவை

நவீன முறையில் அமையப்பெற்ற சைவ ஹோட்டலுக்கு சகல ஊழியர்களும் தேவை. 8—2—82க்கு முன் நேரில் சமுகம் அளிக்கவும். ஸ்ரீ அம்பாள் சைவ ஹோட்டல் அன்ட் பேக்கரி, ஸ்டேசன் வீதி, மாங்குளம். 2137

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள E. N. Morris Minnor உடன் விற்பனைக்குண்டு. திருமதி அ, அருளானந்தம், 27, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம் (2169)

வீடு, கிணறு, மில் அடங்கிய இரண்டு ஏக்கர் வளவுக்காணியும் மூன்று ஏக்கர் வயல் காணியும் இரண்டிற்கும் நீர்ப்பாசன வசதி உண்டு. நேரில் வரவும். இ. கதிரவேலு, சிவகுமாரிமில் 3rd யூனிற் யோகபுரம், மல்லாவி, வவனிக்குளம். (2167)

## பயிற்சி

சினிமா ஒப்பறேற்றர் (Operater)வேலை பழக விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். மிகக் கெதியில் நல்லமுறையில் பழக்கிக் கொடுக்கப்படும். மனேச்சர், லிபேட்டி சினிமா, அச்சுவேலி. 2136

பாலர் கல்விக் கழகத்தால் பாலர் பாடசாலை ஆசிரியைக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் தைப்பூசத்தன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாக உள்ளது. இவ்வகுப்பு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற உள்ளது. பயில விரும்புவோர் நற்சான்றுகளுடன் நேரில் வரவும். விபரங்கட்கு: இ. இரத்தினகோபால், செயலாளர், 49/5, யாழ்றோட், (ஸ்ரீதர் தியேட்டருக்கு அண்மையில்) (2174)

## வகுப்புகள்

J B C யின் வகுப்புகள் அனைத்தும் 33, பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டடத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை, விரிவுரையாளர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம். 2164

## யாழ். செயலகத்தில் சுதந்திரதின வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் இன்று சுதந்திர தினத்தையொட்டி, தேசிய தினக்கொண்டாட்டம் நடைபெறவிருக்கிறது.

இன்று காலை 8 15 மணிக்கு விருந்தினர் கச்சேரியில் கூடுவர் காலை 8.30 மணிக்கு தேசிய கீதத்துடன் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்படும். காலை 8.35 மணிக்கு விருந்தினருக்கு பொங்கல் பரிமாறப்படும்.

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவின் முன்சாட்சியமளித்த கட்சிகள் இயக்கங்களிடையே ஐ. தே. கட்சியும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் அதிமுக்கியத்துவம் அடைந்தன. ஐ. தே. கட்சியின் குரல் இலங்கையில் இருக்கின்ற தேசிய இனமக்களின் கோரிக்கையாகவும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் குரல் இந்நாட்டில் இருக்கின்ற தமிழ்ப்பேசும் மக்களின் கோரிக்கையாகவும் கொள்ளக்கூடியதாக இவ்விரு கட்சிகளின் சாட்சியங்கள் அமைந்தன.

நாட்டின் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கும் சிறுபான்மைத் தமிழ்ப் பேசும் இனமான தமிழர்களுக்கும் ஆட்சியதிகாரங்களில் சமப்பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதே தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ ஜீ. பொன்னம்பலம் அவர்களின் வாதமாக இருந்தது. இவ்வாதத்தில் பிற்காலத்தில் நாட்டை இரு கூறுகளாகப் பிரிந்து இரண்டு விதமான ஆட்சிக்கு வழி சமைத்து விடும் அறிகுறிகள் தென்படுவதாக கருருதப்பட்டதால் இதனை சிங்கள இயக்கங்களும் ஐக்கியதேசியக்கட்சியும் பலமாக எதிர்த்தன.

# கத்தியின்றி....

## ஜீ. ஜீயின் லண்டன் பயணம்

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தனது கொள்கையை சோல்பரி ஆணைக்குழு முன்னிலையில் பல நாட் கணக்காக விளக்கி தனது விவாதத் திறமையை நிலைநாட்டினார். எனவே ஜீ. ஜீயின் விவாதத்துக்கு சோல்பரி ஆணைக்குழு ஈடு கொடுக்க முடியாத நிலையில் சோல்பரிப்பிரபுவினால் ஜீ. ஜீ. அவர்களுக்கு ஓர் ஆலோசனை கூறப்பட்டது. அந்த ஆலோசனை பின்வருமாறு அமைந்தது.

''தங்களது கொள்கையையும் விவாதத் திறமையையும் நான் பாராட்டுகிறேன். ஆனால் இத்திட்டம் பெரும்பான்மை இனத்துக்கும் சிறுபான்மை இனத்துக்கும் ஐம்பதுக்கைம்பது என்ற விகிதாசாரத்தில் அரசியல் அதிகாரம் கோருகிறது. இத்திட்டம் என்னைப் பொறுத்தமட்டில் நடைமுறைச்சிக்கலை ஏற்படுத்தும். என்னை எனது அரசாங்கம் இந்த நாட்டில் இருக்கின்ற இனங்களின் விகிதாசார அடிப்படையில் சகல இனத்துக்கும் பொதுவான ஓர் அரசியல் யாப்பை உருவாக்கும் அதிகாரத்துடன் தான் அனுப்பி வைத்திருக்கிறது. தங்கள் கோரிக்கையை என்னால் ஏற்க எனக்கு அதிகாரம் இல்லை. முடியுமானால் குடியேற்ற நாட்டு அமைச்சரிடம் சென்று உங்கள் கோரிக்கையை விடலாம்.''

அதற்குப் பிறகு இவ்வாலோசனையை ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த தமிழ் தலைவர்களும் சில முஸ்லிம் பிரமுகர்களும் ஆதரித்து திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களோடு கலந்து பல ஆலோசனைக்கூட்டங்கள் நடந்தன. இறுதியாக ஜீ. ஜீ அவர்களை இங்கிலாந்துக்கு அனுப்பி பிரிட்டனின் குடியேற்றத் திட்ட மந்திரியிடம் ஐம்பதுக்கைம்பது கோரிக்கையை வற்புறுத்துவது என்று முடிவாகியது. அம்முடிவுக்கு இணங்கி பிரயாணக்கஷ்டம் மிகுந்த அக்காலத்தில் வெகு சிரமத்துடன் திரு ஜீ, ஜீ. பொன்னம்பலம் இங்கிலாந்து சென்றார் அதன் பின்பு ஜீ. ஜீ. யின் திட்டம் ஐம்பதுக்கைம்பது திட்டம் என்ற பெயரில் தமிழ் மக்களிடையே முக்கியத்துவமடைந்து, இவரைக் கேலி செய்த சில தமிழ்ப் பிரமுகர்களைக்கூட சிந்திக்க வைத்துவிட்டது. இத்திட்டம் ஜீ.ஜீயின் புகழை நாட்டில் மேலோங்கச்செய்து தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவர் என்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தது,

இச்சந்தர்ப்பத்தில் முக்கியமான ஓர் அம்சத்தை ஞாபகப்படுத்துவது நமது கடமை (அதாவது) ஜீ. ஜீ. அவர்கள் இங்கிலாந்து சென்று நாட்டுக்குத்திரும்பி வருவதற்கிடையில் சோல்பரி வெள்ளையறிக்கையைஅங்கீகரிப்பதில்லை என்ற வாக்குறுதியை இத் தமிழ்த்தலைவர்கள் அன்னாருக்கு அளித்திருந்தனர்.

### அவசரச்செய்தி

திரு. ஜீ. ஜீ, பொன்னம்பலம் லண்டன் சென்று குடியேற்ற நாட்டு மந்திரியிடம் தனது ஐம்பதுக்கைம்பது கோரிக்கையை வற்புறுத்தி விவாதித்து நல்ல ஒரு முடிவோடு நாடு திரும்ப இருந்த நேரத்தில் இலங்கையிலிருந்து பிரித்தானிய அரசுக்கு ஓர் அவசரச்செய்திபறந்தது. சோல்பரி குழுவின் வெள்ளையறிக்கைக்கு நாட்டில் சிறுபான்மைத் தலைவர்கள் ஒப்பம் இட்டு அங்கீகரித்து விட்டார்கள் என்பதே அது. இச்செய்தி ஜீ. ஜீ. அவர்களுக்குப் பெரும் பேரிடியாக அவமானமாகவும் இருந்தது, உடனே பெரிய ஏமாற்றத்துடனும் வாடிய முகத்துடனும் ஜீ, ஜீ, அவர்கள் நாடு திரும்பினார், அவரை அணுகிய பிரபல பத்திரிகை நிருபர்களுக்கெல்லாம் அவர் சொன்ன ஒரே ஒரு வார்த்தை ''எனக்குத்துரோகமிழைத்த இத்தனை தமிழ்த்தலைவர்களையும் சுதந்திரப் புதிய பாராளுமன்றத்துக்கு வரவிடமாட்டேன் என்பதாகும், அதன் பிறகு நடந்த முதலாவது பொதுத் தேர்தலில் அத்தனைத் தமிழ்த் தலைவர்களையும் தனது தமிழ்க் காங்கிரஸ அபேட்சகர்களைக் கொண்டே மண் கவ்வ வைத்தார். தான் ஒரு தீர்க்க தரிசனம் வாய்ந்த அரசியல் ஞானியும் தமிழ்ப்பேசும் இனத்தின் தனிப்பெரும் தலைவரும் என்பதை நிலைநாட்டினார் அப் பெரியாரின் நினைவைத் தமிழ் மக்கள் என்றும் நினைவில் வைத்திருக்கக் கடமைப்பட்டவர்கள்.

### டொமினியன் அந்தஸ்து

நாடு சுதந்திரம் என்ற பெயரில் ஓர் டொமினியன் அந்தஸ்தை பிரிட்டனின் மேலாதிக்கத்தோ பெற்றது. பிரிட்டிஷ் தேசியக் கொடி அகற்றப்படவில்லை. தேசிய கீதமும் அகற்றற்றப்படவில்லை. கட்டுநாயகா விமானத்தளமும் திருகோணமலைக் கடற்படைத்தளமும் பிரிட்டிஷாரின்ஆதிக்கத்தில்இருந்தன. நீதி நிர்வாகத்தின் இறுதித் தீர்ப்பு பிரிவிக்கவுன்சில் என்ற பெயரில் பிரிட்டனின் ஆதிக்கத்தில்தான்இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக பிரித்தானிய ராணியாகிய எலிசபெத் ராணி இலங்கைக்கும் ராணியாகப் பிரகடனப்படுத்தப்பட்டார். ராணியின் பிரதிநிதியாகிய கவர்னர்ஜெனரலே நமது நாட்டை ஆட்சிசெய்தார் இதுதான் 1948ம் ஆண்டு மாசி மாதம் 4ந் திகதி நமக்களித்த பிரித்தானிய அரசியல் சுதந்திரம்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றமே பிரிட்டனின் ஆதிக்கத்திலிருந்து படிப்படியாக சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாகவும் ''நமோ நமோ மாதா'' என்ற கீதத்தை இலங்கையின் தேசியக்கீதமாகவும் அங்கீகரித்தது. அதைத்தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் பிரிட்டனின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருந்த கட்டுநாயக விமானத் தளம், திருக்கோணமலைக் கடற்படைத்தளம், நீதித் துறை, ராணியின் மேலாதிக்கம், அனைத்தையும் நீக்கி ஓர் பூரண சுதந்திர ஆதிக்கத்தை நமது நாடு பெற்றுவிட்டது ஆனால் ஒருநாடுபொருளாதார விடுதலை அடையும்வரைக்கும் அந் நாட்டைவிடுதலையடைந்த நாடாகக் கொள்ளமுடியாது.

எனவே பொருளாதாரவிடுதலையை அடைய எமது அரசாங்கம் பலபாரிய அபிவிருத் திட்டங்களைச் செயற்படுத்துவதோடு பழையபுராதனக் கட்டடம்போன்றுகாட்சியளித்துக்கொண்டிருக்கும் பிரித்தானியக் கலை, கலாச்சாரங்களைக் கொண்டமான பழைய பாராளுமன்றத்துக்குப் பிரியாவிடை கொடுத்து கோட்டேத் தொகுதியில் ஜயவர்த்தனபுரத்தில் முற்றிலும் நமது நாட்டின் கலை, கலாச்சாரங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டு கம்பீரமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கும் புதிய பாராளுமன்றத்துக்கு நமது மக்கள் பிரதிநிதிகள் விஜயம் செய்யஇருக்கும் இச் சந்தர்ப்பம் இலங்கையின் பொருளாதார விடுதலையடையும் சுதந்திர தின ஆண்டாக மலர்வதற்கு நாம் அனைவரும் திடசங்கற்பம் செய்து நாட்டின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுப்பதே நமது எண்ணமாக மலர வேண்டும்.


சிசில் (SISIL) குளிர்சாதனப் பெட்டிகள்

6 கன அடி (Cu. ft) மிகக் குறைந்த தொகை தற்பொழுது கையிருப்பில் உள்ளன — உடனே வந்தால் பெற்றுக்கொள்ள முடியும்.

8 கன அடி (Cu ft) ஓடர் செய்த 1 — 1½ மாதகாலத்தில் கொடுக்க முடியும்.

யமஹா (YAMAHA) மின் உற்பத்தி இயந்திரங்கள்

மோட்டார் சைக்கில்கள்

பல மொடல்கள் பட்ஜெட்டுக்கு முந்திய விலையில் கையிருப்புகள் இருக்கும் மட்டும் விற்பனை செய்வோம். விற்பனைக்கு பிந்திய சேவையும், உப உறுப்புகளும் உத்தரவாதமும் உண்டு.

றலி (RALEIGH) ஒரிஜினல் சைக்கில்கள்

முழுக்க முழுக்க இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டவை. உடனே ஓடர் செய்யவும்.

சன்யோ (SANYO) டாட்டுங் (TATUNG) ரெலிவிஷன்கள்

எம்மிடம் குறைந்த விலையில் உள்ளன.

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்.

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 234


இரண்டாவது

## பிறந்ததின விழா



செல்வன் அலக்ஸான்டர் அழகர்சாமி

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 234/1—ம் இலக்க ''சரஸ்வதி இல்லம்'' அழகர்சாமி தம்பதிகளின் தவப்புதல்வன்

செல்வன் அலக்ஸான்டர்

இன்று தமது இரண்டாவது பிறந்ததினத்தை சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, சின்னம்மா, இந்திய அப்பம்மா, அப்பையா, பெரியப்பா, சித்தப்பா, மாமி, அம்மப்பா, மைடமாமாமார் ஆகிய அனைவரும் நீண்ட ஆயுளும் நிறைந்த கல்வியும் பெற்றுச் சீருடனும் சிறப்புடனும் வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றனர். (2183)

## வீடுடைத்து கொள்ளை

(யாழ்ப்பாணம்)

வீடொன்று உடைக்கப்பட்டு கசற்றேடியோ, நைலக்ஸ் சாறிகள், எவர் சில்வர் பாத்திரங்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

மயிலிட்டியிலுள்ள தேவதாஸ் செல்லத்துரை என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளை நடைபெற்றுள்ளது. (மா)

## குடிநீருக்கு தட்டுப்பாடு

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்தில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்று வரும் பிரயாணிக பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர்.

## பாடசாலையில் சுலோகங்கள்

(வவனியா)

''சுதந்திரதினத்தை பகிஷ்கரியுங்கள்' என்று வவுனியாவிலுள்ள தமிழ் மகாவித்தியாலயத்தில் சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தது தொடர்பாக, அவ்வித்தியாலய காவலாளி பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். (க)

கொக்குவில் மேற்கில்

## நள்ளிரவில் ராணுவத்தினர் திடீர்ச் சோதனை

(கோண்டாவில்)

நேற்று முன்தினம் நள்ளிரவு நேரம் கொக்குவில் மேற்கில் உள்ள ஒரு வீடு மூன்று ராணுவ வாகனங்களில் வந்த இராணுவ வீரர்களினால் முற்றுகையிடப்பட்டது.

இவ்வாறு இராணுவத்தினரால் சோதனைக்குள்ளான வீடு ஆனைக்கோட்டை வீதியில் உள்ளது.

இராணுவத்தினர் குறிப்பிட்ட வீட்டுக்குச் சென்று ஒரு இளைஞர் பற்றி விசாரித்ததுடன் அவர் படித்த பாடசாலை பற்றியும் விசாரித்துச் சென்றனர்.

## தாலிக்கொடி திருட்டு: குற்றத்தைஒப்புக்கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

13,500 ரூபா பெறுமதியான தாலிக்கொடியையும் 675ரூபா ரொக்கப்பணத்தையும் திருடியது தொடர்பாகப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் நேற்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தைச் சேர்ந்த இந்திரராசா ரஞ்சிதமலரின் வீட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற இத் திருட்டுத் தொடர்பாகப் பொலிசார் சந்தேக நபர்களைக் கைது செய்திருந்தனர்.

திருடப்பட்ட தாலிக்கொடியை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நெல்லநாதன் சிவப்பிரகாசத்திற்கு 1500 ரூபாவிற்கு விற்றதாக விசாரணையில் தெரியவந்ததைத் தொடர்ந்து அவரிடமிருந்து பொலிஸாரினால் மீட்கப்பட்ட தாலிக்கொடி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

சந்தேகநபர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மகேந்திரராசா, சுப்பையா தம்பிப்பிள்ளை ஆகியோரை இம்மாதம் 17ம் திகதி வரைறிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (மா)

### சுமுகமுடிவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களின் பேச்சுவார்த்தை முடிவு பாதகமாக அமைந்தால் திங்கட்கிழமை தொடக்கம் விஞ்ஞானபீடம், மருத்துவபீடம், நுண்கலைப்பீடம் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களும் முழுமையாக வகுப்புகளைப் பகிஷ்கரிப்பார்கள் என்றும் மாணவர் அவைத் தலைவர் திரு. கே. என். இராசநாயகம் தெரிவித்தார்.

மேலும் 6ம் திகதி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடக்கட்டிடத்தைத் திறந்து வைக்கவரும் உயர்கல்வி அமைச்சின் செயலாளரும் பல்கலைக்கழக மானியக்குழுவின் தலைவருமான பேராசிரியர் ஸ்டான்லி கல்பகேயிடம் இக் கோரிக்கை சம்பந்தமாக மகஜர் ஒன்று சமர்ப்பிப்பதென்றும் முடிவுசெய்துள்ளனர். (மா)

### யாழ். மாவட்ட.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாடொன்றின் போது திரு. நடராசா யாழ். மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினர்.

யாழ். மாவட்டம் அபிவிருத்தி அடையாததற்கான காரணம் அரசின் பாரபட்ச நடவடிக்கையேயாகும் எமது திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு வெளிநாடுகளின உதவி அவசியம் வேண்டும் என்றும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் வெறும் பெயரளவிலே தான் இருக்கின்றனவே ஒழிய, திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் போதிய அதிகாரங்கள் அளிக்சப்படவில்லை என்றும் திரு. நடராசா தெரிவித்தார்.

பருத்தித்துறை எம். பி திரு. க. துரைரத்தினம் பேசுகையில்,

''கொரியா நாட்டில் இருக்கும் சமூக இயக்கங்கள் போல் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலும் அமைப்பதற்கு ஆலோசனைகளும், அதற்கான உதவிகளும் தந்துதவ வேண்டும்.'' என்றார்.

இம் மகாநாட்டில் யாழ். மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா. யாழ். செயலக அதிகாரிகள், யாழ் அபிவிருத்திசபை உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (மா)

# "2-ம் எதிரி கிளப்புக்குள் சென்று வாளுடன் வந்தார்"

## ஆரியகுளம் பிரேமன்கொலை வழக்கில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

பிரேமனுக்கு 1ம் எதிரி உடைந்த போத்தலால் குத்த எத்தனித்தபொழுது 3ம் எதிரி பிரேமனின் பின் கொலரில் பிடித்தார்.''

ஆரியகுளம் பிரேமன் கொலை வழக்கில் சாட்சியமளித்த திரவியம் இராஜேந்திரம், குறுக்குவிசாரணையின் போது மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு விசாரணை யாழ் நீதிமன்றத்தில் நீதவான் திரு, ரி. ஜோகநாதன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.

இவ்வழக்கில் 81 நவம்பர் 1ம் திகதி நடேசு பிரேமனைக் கொலைசெய்ததாக நடேசு யோகராசா அல்லது போயா, வேலுப்பிள்ளை கந்தசாமி அல்லது வெள்ளையன், சுப்பிரமணியம் விஜயராசா அல்லது விஜயன் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜரானர். வழக்காளிதரப்பில் பொலிசாரின் உதவியுடன் சட்டத்தரணி வி. நடராசா ஆஜரானர்.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சியமளித்த திரவியம் இராஜேந்திரம் கூறியதாவது:

சட்: இறந்தவருக்கும் எதிரிகளுக்குமிடையிலுள்ள பிரச்னை அல்லது தகராறு, முதல்நாள் கடையில் நடந்த சம்பவத்தைஒட்டியது?—ஆம்.

சட்: பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுக்கப்பட்ட பொழுது இறந்தவர் ஏன் தாக்கப்பட்டார் என்று சொன்னீரா? இல்லை.

சட்: பொலிசுக்கு கொடுத்த வாக்கு மூலத்தில் இறந்தவருக்கும் எதிரிகளுக்கும் என்னதகராறு என்று சொன்னீரா?—ஞாபகமில்லை.

சட்: 1ம் எதிரி இறந்தவரை உடைந்த போத்தலால் வெட்டியதைக் கண்டீரா?—ஆம்.

சட்: எங்கே வெட்டு விழுந்தது? —தெரியாது. ஓங்கும் போழுது மாத்திரம் கண்டனுன்

சட்; 2ம், 3,ம் எதிரிசள் என்ன செய்தார்கள்? —அவர்களுக்குக்கிட்டச் சென்றார்கள்.

சட்: இறந்தவரை யார் பிடித்தது? —3ம் எதிரி பிடித்தார்.

சட்: எத்தனை குத்து குத்தினர்? ஒருமுறை குத்தினர்.

சட்: அக்குத்து எங்கே விழுந்தது? — தெரியாது.

சட்: அதற்குப்பின்புஎன்ன நடந்தது? ஒன்றும தெரியாது.

நீதிபதி: நீர் ஓடும்பொழுது அவ்விடத்தில் அவர்கள் நின்றார்களா? —ஆம்.

சட்: பொலிசுக்குக் கொடுத்த வாக்குமூலத்தில், 'வெள்ளையன் (2ம் எதிரி) உன்னைக் கொல்லமாட்டேன்' என்று கூறி உமக்கு முன்னால் பிரேமனைப் பிடிக்க அப்பொழுது போயா தன் கையிலிருந்த சோடாப்போத்தலால்,இறந்த பிரேமனைதாக்கினர் என்று சொன்னீரா?—சொல்லவில்லை (பின்பு சாட்சி ஆம்என்றார்)

சட்: நீர் பொலிசுக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் 2ம் எதிரி பிடிக்க 1ம் எதிரி குத்தினர் என்பது பிழை? — மௌனம்.

சட்: மரண விசாரணையில் சொன்னசாட்சியத்தில் இறந்தவரை 3ம் எதிரி பிடிக்க 1ம் எதிரி குத்தினர் என்று சொன்னது சரியா? ஆம்? —மரணவிசாரணை நடத்திய பொழுது எனக்கு இரத்தப் பெருக்கு இருந்தது. நான் மயக்க நிலையில் இருந்ததால் ஞாபகமில்லை. எனக்குவலது பக்க மேல் நெற்றியில் காயம் இருந்தது.

சட்: அக்காயம் உரஞ்சல் காயம்? —இல்லை வெட்டுக்காயம்.

சட்: நீர் சம்பவதினம் இறந்த பிரேமனுடன் கூடிக் கொண்டு செல்லவில்லை? —கூடிக்கொண்டுபோனேன்.

சட்: பிரேமன் ஓடும் பொழுது யார் பிடித்தார்ள்? —3ம் எதிரி.

சட்; மரணவிசாரணையில் சாட்சிய மளிக்கும் பொழுது 2ம், 3ம், எதிரிகள் பிடித்தார்கள் என்று கூறியிருந்தால் அது பிழை?—ஆம்.

சட்: டாக்ஸியைவிட்டுஇறங்கும்பொழுது பிரேமனின் கையில் ஏதும் இருந்ததா?—இல்லை.

சட்: உம்முடைய கையில் இருந்ததா?—இல்லை

சட்: எதிரிகள் கையில் ஆயுதம் இருந்ததா?—இல்லை.

சட். ஆரியகுளம் சந்தியில் டாக்ஸியில் இருந்து எதிரிகள் மூவரும் இறங்கும்பொழுது ஏதாவது இருந்ததா?—இல்லை.

சட்: ஏறும்பொழுது ?—இல்லை.

சட்: இறந்தவர் கையில் இருந்ததா?—இல்லை.

சட்: விளையாட்டுக் கழகத்தில் நீங்கள் ஐவரும் இறங்கும் பொழுது எதிரிகள் கையில் ஏதும் இருந்ததா?—இல்லை.

சட்: 1ம் எதிரி குத்திய சோடாப்போத்தல எங்கிருந்து வந்தது?—தெரியாது.

சட்: உமக்கு 2ம் எதிரி கொண்டுவந்த வாள் எங்கிருந்து வந்தது என்பது தெரியும் — ஆம்.

சட்; எதிரிகள் கையில் ஆயுதம் இருந்ததா?—இல்லை.

விசாரணை இம்மாதம் 9-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (மா)

## அன்ரன் கொலை வழக்கு: எதிரிகள் பிணையில்அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் சார்ஜன்ட் அன்ரன் கொலைவழக்கில் எதிரிசுளான இராணுவச் சிப்பாய்கள் இருவரும் தலா 7, 500 ரூபா பிணையில் நிபந்தனை ஒன்றின் பேரில் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

1980 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி இரவு யாழ். காங்கேசன்துறை வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக சார்ஜன்ட் அன்ரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக இராணுவச் சிப்பாய்களான டொன் சிறில் ஹெட்டியாராச்சி, உக்வத்தை ஜயலத்கே உப்புல் ஆகிய இருவர் மீதும் யாழ். நீதிமன்றத்தில வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஆரம்ப விசாரணை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடைபெற்று மேல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டது.

சிப்பாய்களிருவரும் பதினேழரை மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து இவர்களைப் பிணையில் விடுமாறு கோரி யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம். ஜமீலிடம் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இம்மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இவர்கள் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர், (மா)

### ஆயுதப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் வந்ததாகவும் கூறப்பட்டது

#### கைகலப்புநடந்தது

பொறியியலாளர் தாக்கப்படுவதைக் கேள்விப்பட்டு அவரைப் பாதுகாக்கச் சென்ற தொழிலாளரும் ஆயுதப்படையினரால் தாக்கப்பட்டதாகவும், இதைத்தொடர்ந்து ஆயுதப்படையினருக்கும், தொழிலாளருக்குமிடையில்கைகலப்பு ஏற்பட்டதாகவும் இதனல் காயங்கள் ஏற்பட்டதாகவும் இச்சம்பவம்பற்றிக் கூறப்படுகிறது.

#### மறியல் போராட்டம்

இச்சம்பவத்தைத் தொடர்ந்து தொழிலாளர் ஒன்றுகக்கூடி தொழிற்சாலை அலுவலகப்பகுதிக்குச் சென்று மறியலை ஆரம்பித்தனர்.

காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை பொதுத்தொழிலாளர் சங்கத்தினர் தொழிலாளருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும் ஆயுதப் படையினர் தொழிற்சாலைக்குள் வருவதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை வேலைசெய்வதில்லை யென்றும் தெரிவித்துள்ளனர். (க)

### ஏற்பாடுகள்

(வவனியா)

வவனியா நகரசபை மைதானத்தில், இன்று காலை சுதந்திரதின விழா நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் பாடசாலை மாணவ மாணவிகளின் அணிவகுப்பு, பொலிசார் அணிவகுப்பு மரியாதை நடைபெறுவதுடன் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்படும். (கு)

### பகிஷ்கரிப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையைத் தெளிவுபடுத்தினர்.

ஆயுதப்படையினர் அல்லது அவர்களது வாகனங்கள் அனுமதியின்றி தொழிற்சாலைக்குள் பிரவேசிக்கக்கூடாது என்றும், நேற்றைய சம்பவம் குறித்துப் பூர்வாங்க விசாரணை நடைபெற வேண்டும் என்றும் தொழிலாளர் விடுத்த கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர் தங்களது பகிஷ்கரிப்பை நேற்றுமாலை கைவிட்டனர்.

இச்சம்பவம் குறித்து விசாரணை மேற் கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகரைக் கேட்டுள்ளார்,

### அதிபர்கள் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைத் தொகுதிப் பாடசாலை அதிபர்களுக்கானகூட்டம் எதிர்வரும் 16 ம் திகதி வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலைகளின தேவைகள் பற்றிஇக்கூட்டத்தில் ஆராயப்படும். (அ)


## மரண அறிவித்தல்

### - ஜே. ஸி. சாள்ஸ் -

(இளைப்பாறிய அதிபர்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ஜே.ஸி. சாள்ஸ் (சாள்ஸ் மாஸ்டர்) காலமானர். இவர் வயலற் சுகிர்தம்மாவின் அன்புக்கணவரும், றூபி, வைத்திய கலாநிதி ஜெயராஜா, காலஞ்சென்ற ராஜேஸ்வரி, வைத்திய கலாநிதி விஜயராஜா, தர்மராஜா, செல்வராஜா, ஜெயராணி, நவரத்தினராஜா ஆகியோரின் தந்தையும், ஸி. ராஜசிங்கம், டி. ஏ. ஆசீர்வாதம், சுகுணவதி, சீதா, இந்திராணி, வசந்தா, இந்திராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள 48 ஏ. இலக்க இல்லத்திலிருந்து 5—2 — 82 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லடகத்திற்காக நல்லூர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

2189


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.